# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 28.06.2022 | supeedsam.com | supeedsam@gmail.com







# அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்தும் ஜூலை 10 வரை முடங்கும்

## எரிவாயு ,எரிபொருட்கள் வரும் சாத்தியம் இல்லை; பாடசாலைகளுக்கு பூட்டு

## மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து சேவைகளும் தடைப்படலாம்

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்து சேவைகளும் ஜுலை 10 வரை நாட்டில் மிக முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடி உச்சம் பெற்றுள்ள நிலையில் நேற்று 27.06.2022 நள்ளிரவு முதல் எதிர் வரும் 10 ஆம் திகதி வரையில் அத்தியாவசிய சேவைகளை மாத்திரம் முன்னெடுத்துச் செல்ல அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, துறைமுகம், சுகாதாரம், அத்தியாவசிய உணவுப்பொருள் விநியோகம் உள்ளிட்ட சில துறைகளுக்கு மாத்திரம் குறித்த காலப்பகுதியில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் எரிபொருள் விநியோகிக்கப்படும் என போக்குவரத்து அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன நேற்றிரவு தெரிவித்தார். ஏனைய அனைத்து துறையினரும் வீடுகளில் இருந்து பணியாற்றிவதன்

02 ஆம் பக்கத்தில்...

# எந்த நேரத்திலும் முழுமையாக முடங்கும் அபாயத்தில் இலங்கை

இலங்கையில் தற்போது ஒரு நாளுக்கு தேவையான அளவில் கூட எரிபொருள் இருப்பு இல்லையென தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஆங்கில நாழிதல் ஒன்று இதுகுறித்த செய்தியினை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் தற்போது ஆயிரத்து 100 தொன் பெற்றோல் மற்றும் 7 ஆயிரத்து 500 தொன் டீசல் மட்டுமே உள்ளதாக கூறப்படுகின்றது.

இலங்கை கடனை செலுத்த தவறியதன் காரணமாக சர்வதேச நிறுவனங்கள் இலங்கையை மோசமாக ஆவணப்படுத்தியுள்ளதாகவும், இலங்கைக்கு எரிபொருளை வழங்க

02 ஆம் பக்கத்தில்...

# மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் மக்களிடம் கருத்து கேட்க நடவடிக்கை

மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பில் நாளை (28) முதல் 03 வாரங்களுக்கு பொதுமக்களிடமிருந்து முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று (27) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையினால் முன்மொழியப்பட்டுள்ள கட்டணங்களை அதிகரிப்பதற்கான பிரேரணையை நாளை முதல் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் இணையத்தளத்தில் பார்வையிட முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கிழக்கில் 85% பாடசாலைகள் இயங்கியது



கிழக்கு மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களில் நேற்று (27) இயங்கும் பாடசாலைகளின் வீதம் பதிவாகியுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

அதன்படி கிழக்கு மாகாணத்திலுள்ள 1122 பாடசாலைகளில்

02 ஆம் பக்கத்தில்...

# தனுஷ்கோடி சென்ற வயோதிப தம்பதி மயங்கிய நிலையில் மீட்பு



இலங்கையில் இருந்து படகு மூலம் தனுஷ்கோடி சென்ற வயதான தம்பதியர் கடற்கரையில் மயங்கிக் கிடந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கையில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இதுவரையிலும் 85-க்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக தமிழகம் வந்து உள்ளனர்.

இந்த நிலையில் இலங்கை திரிகோணமலை பகுதியில் இருந்து படகு மூலம் வயதான தம்பதியர் 2 பேர் நேற்று (27) அதிகாலை ராமேஸ்வரம்

02 ஆம் பக்கத்தில்...

# வடபகுதியை இந்திய அரசிற்கு விற்க இலங்கை அரசாங்கம் முயற்சி

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் அபிவிருத்தி என்ற போர்வையில் வட பகுதியை இந்திய அரசிற்கு விற்கப் போகிறார்கள் என மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சங்க தலைவர் மொகமட் ஆலம் தெரிவித்துள்ளார்,

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற நேற்று ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

மன்னார் மாவட்டத்தில் காற்றாலை மின்சாரம் திட்டம், கனியவள மண் அகழ்வு போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. கடந்த வியாழக்கிழமை இந்திய குழுவொன்று மன்னார் மாவட்டத்தில் அதானி குழுமம் முன்னெடுக்கவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து

02 ஆம் பக்கத்தில்...

# புலிகளின் தங்கத்தையும் பணத்தையும் கொள்ளையிட்ட ராஜபக்சவினர்

எந்தளவுக்கு எதிர்ப்புகளை வெளியிட்டாலும் பேரணிகளை நடத்தினாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவியில் இருந்து விலகிச் செல்ல மாட்டார் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவியில் இருந்து விலக மாட்டார் என்பதால்,

02 ஆம் பக்கத்தில்...


MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

கல்வியே துணை

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Franzósisch, Englisch, Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen



"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH



Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302

Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma :34598

25605: cicero


# எரிவாயு சிலிண்டர்களை கண்டு ஆச்சரியப்பட்ட ஆஸி. வீரர்கள்



இலங்கை-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் வெளிப்புறத்தில் எரிவாயு சிலிண்டர்கள் அணிவகுத்து வைக்கப்பட்டுள்ளன.

காலி கிரிக்கெட் மைதானத்திற்கு

02 ஆம் பக்கத்தில்...

# 'வெண்மயில் வாகனனே கதிர்வேலா' இறுவெட்டு வெளியீடு

வெண்மயில் வாகனனே கதிர்வேலா என்ற பக்தி பாடல்கள் அடங்கிய இறுவெட்டு வெளியீட்டு விழா அண்மையில் சுவிட்சர்லாந்து செம்மாக் கிறேத்தன் ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் நடைபெற்றது.

இந்த இறுவெட்டினை சுவிட்சர் லாந்தில் வாழும் மூத்த ஊடகவி யலாளர் ஞானசுந்தரம் குகநாதன் பெற்றுக்கொண்டார். ஸ்ரீகதிர்வேலா யுத சுவாமி ஆலயத்தின் மகிமையை எடுத்தியம்பும் பாடல்களை இன்பம் அருளையா பண்டிதர் ச.வே.பஞ்ச ராச்சாரம் அருள்யோகா ஆயியோர் இயற்றி இருந்தனர்.

இந்த இறுவெட்டில் உள்ள எட் டுப்பாடல்களில் நான்கு பாடல்களை செல்வி அர்ச்சனா அற்புதராசா பாடியி ருந்தார். அஜிதா விஜயகுமார் அமிர்தசிந் துசன் மதுசிகன் மதுஸ்ரீ ஆதித்தன் ஆகி யோர்தலா ஒவ்வொரு பாடல்களையும் பாடியிருந்தனர். முகிலரசன் பிரியன்தம் பிராசா ஆகியோரின் இசையமைப்பில் இந்த பாடல்கள் வெளிவந்துள்ளன. ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலய தலை வர் வே.கணேசகுமார் பொருளாளர் அற் புதராசா ஆகியோர் இறுவெட்டினை வெளியிட்டு வைத்தனர்.

இந்த ஆலயத்தின் மகிமையை வெளிப்படுத்தும் பாடல்கள் அடங் கிய இறுவெட்டினை அர்ச்சனா அற்புத ராசா பாடி வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.







## புலிகளின் தங்கத்தையும் பணத்தையும் கொள்ளையிட்ட ராஜபக்சவினர்...

ஜனாதிபதி மாளிகையின் வாயில் கதவை உடைத்து, ஜனாதிபதி கழுத்தை பிடித்து வெளி யில் தள்ள வேண்டும்.

ராஜபக்சவினர் சிவனொளிபாத மலையில் இருந்து மணியை கழற்றி விற்றனர். வர லாற்று சிறப்புமிக்க விளக்கை விற்றனர். தாது கோபுரங்களில் உள்ள புதையல்களை எடுத்த னர். எட்டு வழிப்பாட்டுதலங்களை (அட்டமஸ் தானம்) ஒன்பதாக மாற்றினர்.

எல்லாளன் பயன்படுத்திய தங்க வண்டியை கொள்ளையிட்டனர். பிரபாகரன் மறைத்து வைத்திருந்த தங்கம் மற்றும் பணத்தை கொள் ளையிட்டனர்.

நாட்டை ஆட்சி செய்யும் கோட்டாபய ராஜ பக்ச என்பவனுக்கு வரலாறும் தெரியாது, கல சாரமும் தெரியாது. எதுவுமே தெரியாது.

ராஜபக்சவினருக்கு இருந்த அதிகாரங்கள் காரணமாக இராணுவத்தில் இணைந்தார், பின்னர் வடமராட்சி போரில் நாட்டை கைவிட்டு அமெரிக்காவுக்கு சென்றார்.

நானும் பெலியத்தையை சேர்ந்தவன், அவர்களும் பெலியத்தையை சேர்ந்தவர்கள். எதுவுமே இல்லாமல் இருந்தவர்களே ராஜ பக்சவினர். வாழ்ந்து வந்த வீட்டையும் அடகு வைத்திருந்தனர். நண்பர்கள் அதனை மீட்டு கொடுத்தனர்.

அரசியல்வாதிகள் தெரியாதவற்றை பேச முயற்சித்து வருகின்றனர். திறமைற்ற ஆட்சி யாளர், கொலைகாரன், மோசடியாளன், இலஞ் சம் பெறும், திருடனை விரட்ட வேண்டும் என்றே மக்கள் போராட்டங்களை ஆரம்பித்தனர்.

யார் இந்த திறமையற்ற, நாட்டை அழித்த ஆட்சியாளன். மிகப் பெரிய எரிபொருள் வரிசை கள், மிகப் பெரிய சமையல் எரிவாயு வரிசை கள், பால் மா வரிசைகள், நோயாளிகளுக்கு மருந்துகள் இல்லை.

இந்த அனர்த்தத்தின் காரணகர்த்தா யார்? கலியுகம், இந்த கலியுகத்தில் அனர்த்தங்களை ஏற்படுத்த ஒருவன் பிறந்தான் அவன் தான் கோட்டாபய ராஜபக்ச.

அனைவரும் கோட்டாபயவையே வெளியே றுமாறு கூறினர். இறுதியில் வெளியேறியது யார்?, மகிந்த ராஜபக்ச. அவரது அடிவருடிகள் வழங்கிய ஆலோசனை படி செயற்பட்டதால், அவர் வெளியேற நேர்ந்தது அது நல்லது.

காலிமுகத்திடலில் மாத கணக்காக இருக்கும் இளைஞர்கள் கோட்டாபய ராஜபக்சவையே வெளியேறுமாறு கூறினர். சென்றாரா?. பிள்ளைகளே என்னை போன்று ராஜபக்சவினர் பற்றி அறிந்தவர்கள் எவருமில்லை.

அவர்களை சுற்றி இருந்துகொண்டு துதிபா டுபவர்களை விட எனக்கு தெரியும். நாங்கள் இளைஞர்களாக இருந்த போதும் அவர்களுடன் இருந்தோம். ராஜபக்சவினர் எமது வீடுகளில் இருந்தனர்.

எனக்கு பின்னாலேயே பசில், கோட்டா போன்றவர்கள் திரிந்தனர். பசில் என்பவன் மிக மோசமான திருடன். அவனிடம் எங்கே பணம் இருந்தது.

அவன் அனுரபண்டாரநாயக்கவுடன் இருந் தவன். காமினி திஸாநாயக்கவிடம் சம்பளம் வாங்கியவன். எப்படி இவர்களுக்கு இந்த பணம் வந்தது. அமெரிக்காவில் வீடுகள், உலகம் எங் கும் வீடுகள்.

சீசெல்ஸ், டுபாய் எங்கு இவர்களுக்கு வீடுகள் இல்லை. மகிந்த ராஜபக்ச வெளியேறினார். ஏன் கோட்டாபய ராஜபக்ச வெளியேறாது இருக் கின்றார். இவன் போக மாட்டான்.

இவன் இருக்கும் வரை நாட்டுக்கு எந்த உத விகளையும் வழங்க வேண்டாம் என நாங்கள் உலகத்திற்கு கூறுவோம். மோசடி, திருடன், வேலை செய்ய தெரியாதவனை அரச நாற்கா லியில் வைத்துக்கொண்டு ஏன் உதவிகளை வழங்க வேண்டும்.

இவனை விரட்ட வேண்டுமாயின் பிள்ளை களே லட்சக்கணக்கில் கொழும்புக்கு வாருங் கள். 9 மாகாணங்களிலும் இருந்து வாருங்கள். நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் முதல் துப்பாக்கி சூட்டை ஏற்றுக்கொள்ள நான் தலைமை தாங்குவேன்.

ஜனாதிபதி மாளிகையின் வாயில் கதவை உடைத்து, உள்ளே சென்று கழுத்தை பிடித்து இழுத்து வந்து வெளியில் தள்ளுவோம். அதற்கு முன்னர் அவன் ஹெலிக்கொப்டரில் சென்று விடுவான்.

இதில் எவரும் இறக்கலாம், நாம் உயிரை தியாகம் செய்வோம். எமது நாட்டு பிள்ளைகள், படையினர் நாட்டுக்காக உயிர்களை தியாகம் செய்தனர் எனவும் மேர்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

## அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த

மூலம் இந்த எரிபொருள் நெருக்கடியை தீர்க்க ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் கோரி யுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பில் நேற்று மாலை இடம்பெற்ற அமைச் சரவை கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப் பட்டதாகவும் இதற்கமைய அத்தியாவசிய சே வைகளுக்கு மாத்திரம் எரிபொருளை வழங்க இதன்போது தீர்மானிக்கப்பட்டதாகவும் அமைச் சரவை பேச்சாளர், போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வசம் மிகக் குறைந்தளவு எரிபொருளே உள்ளது. அவற்றை அனைத்து தரப்பினருக்கும் பங்கீடு செய்வதில் சிக்கல் நிலை ஏற்படும்.

ஆகவே, எதிர்வரும் 10 ஆம் திகதிவரை அத் தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கு ஏனைய செயற்பாடுகளை தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கும் அமைச்சரவை தீர்மானித் துள்ளது. இதற்காக ஏனைய துறையினரின் ஒத்துழைப்பையும் எதிர்ப்பார்ப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, எரிபொருள் நெருக்கடி உச் சமடைந்துள்ளமை அடுத்து கொழும்பு வல யத்திலும் மேல் மாகாணத்தின் புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள அனைத்துப் பாடசாலை களும் மற்றைய மாகாணங்களின் முக்கிய நகரங்களை அண்மித்ததாக அமைந்துள்ள பாடசாலைகளும் ஜுலை 10 வரை மூடப்படும் எனவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஏனைய, பாடசாலைகள் தொடர்பில் தீர் மானம் எடுப்பதற்கான அதிகாரம் பாடசாலை களின் அதிபர்களுக்கும், மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித் துள்ளார். எதிர்வரும் 10 ஆம் திகதியின் பின் னர் முறையாக எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோகிக்கப்பதற்கான முறையான திட்ட மொன்றை வகுத்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் என்ற வகையில் இந்த நெருக்கடி நிலைமை தொடர்பில் மிகவும் வருந்துவதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித் துள்ளார்.

இதேவேளை, தற்போதைய எரிபொருள் கையிருப்பை கருத்திற்கொண்டு, எதிர்வரும் காலங்களில் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்தையும் மட்டுப்படுத்த வேண்டிய நிலைமையும் ஏற்படக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.




## எரிவாயு சிலிண்டர்களை கண்டு ஆச்சரியப்பட்ட..

அருகில் உள்ள விநியோக நிலையத்தில் கடந்த 20 நாட்களாக எரிவாயு சிலிண்டர்க ளுக்காக வரிசையில் காத்திருப்பதாக காலி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் குறித்த மைதானத்தைச் சுற்றி லிட்ரோ எரிவாயு மற்றும் லாஃப்க்ஸ் எரிவாயு சிலிண்டர்கள் வரிசையாக வைக் கப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடர் காரணமாக எரிவாயு சிலிண்டர்களை அப் பகுதியிலிருந்து அகற்றுமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவித்த பிரதேசவாசிகள், எரிவாயு சிலிண்டர்களை வழங்கினால் மாத்திரமே வெளியேறு வோம் என பொது மக்கள் தெரிவித்துள்ள னர்.

மேலும் காலி மைதானத்தை சுற்றிலும் எரிவாயு சிலிண்டர்கள் அடுக்கப்பட்டுள்ள தனை அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் ஆச்சரியமாக பார்த்துள்ளனர்.இதுபற்றி கேட்டுத் தெரிந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் போட் டிக்கான பயிற்சிகளில் அவுஸ்திரேலிய அணியினர் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் 85% பாடசாலைகள் இயங்கியது...

951 பாடசாலைகள் எவ்வித தடையு மின்றி இன்று இயங்க முடிந்துள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் 17 கல்வி வல யங்களில் அதிபர்களின் வருகை 85% ஆக பதிவாகியுள்ளது.

மேலும் ஆசிரியர்களின் வருகை 58.9% ஆகவும் மாணவர்களின் வருகை 60.9% ஆகவும் பதிவாகியுள்ளது.

பாடசாலை கல்வி சாரா ஊழியர்களின் வருகை 72.95% ஆக பதிவு செய்யப் பட்டுள்ளது என கிழக்கு மாகாண ஆளு னர் மேலும் இதனை உறுதிப்படுத்தி யுள்ளார்.

## தனுஷ்கோடி சென்ற வயோதிப தம்பதி...

அருகே உள்ள தனுஷ்கோடி கடற்கரை யில் வந்து இறங்கினர்.

இவர்கள் இருவரும் மயக்க நிலையில் கடற்கரையில் சுருண்டு விழுந்து கிடந்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த கடலோர போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து மயக்க நிலையில் இருந்த அவர் களை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இவர்களுக்கு மருத்துவமனையில் டாக் டர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வடபகுதியை இந்திய அரசிற்கு விற்க..

சென்றிருக்கின்றது.

இலங்கையில் உள்ள வளங்களை சரி யாக பயன்படுத்த இலங்கை அரசுக்கு தெரி யவில்லை. காலத்துக்கு ஏற்றவாறு எதிர் காலத்தை கவனத்தில் கொண்டு செயற்ப டாமையால் நாடு பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ளது. இந்த அரசாங்கம் நாட்டினை கூறு போட்டு ஒவ்வொரு பகுதியாக விற்று வருகிறது. இப்போது அதானி குழுமத்துக்கு வட பகுதியை விற்க போகின்றார்கள் என்றார்.

## எந்த நேரத்திலும் முழுமையாக..

சர்வதேச வங்கியிடம் உத்தரவாதம் கோருவதாகவும் கூறப்படுகிறது.

கடந்த ஒரு வாரமாக நாட்டிற்கு எரி பொருள் கப்பல்கள் எதுவும் வரவில்லை எனவும், விரைவில் எரிபொருள் கப்பல் வரவில்லையென்றால், பொது போக்கு வரத்து கூட தடைப்பட்டு நாடு முற்றாக முடங்கிவிடும் எனவும் குறித்த நாழிதல் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது கையிருப்பில் உள்ள குறைந்தளவான எரிபொருட்கள் அத் தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே வழங்கப்படுவதாகவும், பொதுமக்க ளுக்கு தேவையான எரிபொருளை வழங்குவதற்கான டோக்கன் முறை பயனற்ற விடயம் எனவும், மின் உற் பத்தி நிலையங்களுக்கு தேவையான எரிபொருளை வழங்க முடியாததால் மின்வெட்டு நேரம் அதிகரிக்கலாம் எனவும் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

# புலம்பெயர் உறவுகள் இங்கு முதலீடுகளை மேற்கோள்வதற்கு முன்வருவார்களாயின் அவர்களுக்கு இங்கு பாதுகாப்பு வேண்டும்

(சுமன்)

எமது புலம்பெயர் உறவுகள் இங்கு முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்வருவார்களாயின் அவர்களுக்கு இங்கு பாதுகாப்பு வேண்டும். அதற்கும் மேலாக அவர்கள் முதலிடும் பணத்திற்கு இங்கு பாதுகாப்பு வேண்டும். அந்தவிதமான நிலைமை இங்கு உருவாக்கப்பட வேண்டும். மாகாணசபைகளுக்கான நிதி அதிகாரங்களே அதற்கான ஒரே வழி என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ. கருணாகரம் ஜனா தெரிவித்தார்.





கிளிநொச்சியில் இடம்பெற்ற உதவும் உறவுகள் அமைப்பின் 13வது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

2009க்குப் பின்னர் அழிக்கப்பட்ட நமது பிரதேசங்கள் தற்போது படிப்படியாக வளர்ச்சியுற்று வருகின்றது. ஆனால் நமது மக்களின் வாழ்வாதாரம் உயரவில்லை. புலம்பெயர் தேசத்திலே எமது மக்கள் பலர் பெரிய செல்வந்தர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் நினைத்தால் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் இருக்கும் எமது மக்களின் வறுமையை ஒழிக்கலாம். நலிவுற்ற எமது மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தலாம். ஆனால், அவர்களுக்கு மனம் இருந்தாலும் அதற்கான களம் இல்லாமல் இருக்கின்றது.

தற்போது இந்த நாடு பெருளாதார ரீதியில் அதள பாதாளத்தில் தள்ளப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் புலம்பெயர் தேசத்திலே வாழும் எமது தமிழ் மக்களை இங்கு முதலீடுகளை மேற்காள்ளுமாறு இலங்கையின் ஆட்சியாளர்கள் அழைக்கின்றார்கள். இந்த நாட்டின் பொருளாதார வீழ்ச்சியினால் கொழும்பிலே காலி முகத்திடல் தொடக்கம் காலி வரை போராட்டங்கள் நடைபெறுகின்றன.

இன்றைய இந்தப் பொருளாதார வீழ்ச்சிக்கு என்ன காரணம் என்பது ஒரு சிறு பிள்ளைக்குக் கூடத் தெரியும். அரசாங்கத்திற்கு அந்தக் காரணம் தெரிந்திருந்தும் அந்த அடிப்படைக் காரணத்தைப் புரிந்து கொள்ளாமல் புலம்பெயர்தமிழர்கள் டொலர் கொண்டுவர வேண்டும் என்று கூறுகின்றார்கள்.

இந்த நாட்டின் பொருளாதாரம் இந்த நிலைக்குச் செல்வதற்கு அடிப்படைக் காரணமே இந்த நாட்டில் தமிழ் மக்கள் இரண்டாந்த தரப் பிரஜைகளாகக் கணிக்கப்பட்டது தான். இந்த நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து சிங்களம் மட்டும் சட்டம், தரப்படுத்தல் போன்றவற்றினால் தமிழர்கள் ஒடுக்கப்பட்டனர். தமிழர்களின் அகிம்சைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறியது. நாங்கள் எங்களது உரிமைகளைப் பெறுவதற்காக ஆயுதம் ஏந்தினோம். தமிழர்களின் போராட்டத்தின் யாதார்த்தத்தை உணர விரும்பாத மாறி மாறி வந்த பேரினவாத அரசாங்கங்கள் அந்தப் போரினை உக்கிரப்படுத்துவதற்காக யுத்தக் கருவிகள், போர் விமானங்கள், யுத்தக் கப்பல்கள் என்பவற்றுக்காக பலவாறாகச் செலவிட்டார்கள்.

அத்துடன், மஹிந்த ராஜபக்சவின் காலத்திலே ஊழல் நிறைந்திருந்தது உண்மைதான். ஆனால் அதற்கும் மேலாக பொருளாதாரத்தின் இந்த நிலைக்கு அடிப்படைக் காரணம் போருக்காகச் செலவழித்த பணம் தான் என்பதை இவர்கள் எற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

எமது புலம்பெயர் உறவுகள் இங்கு முதலீடுகளை மேற்கொள்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள். அவ்வாறு முதலீடுகளை மேற்கொள்பவர்களுக்கு இங்கு பாதுகாப்பு வேண்டும். அதற்கும் மேலாக அவர்கள் முதலிடும் பணத்திற்கு இங்கு பாதுகாப்பு வேண்டும். அந்தவிதமான நிலைமை இங்கு உருவாக்கப்பட வேண்டும்.

இன்று 21வது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வர எத்தணிக்கின்றார்கள். இதற்கு முன்னர் கொண்டு வரப்பட்ட 13வது திருத்தச் சட்டத்தில் உள்ள சரத்துகளே இங்கு முழுமையாக அமுலாக்கப்படவில்லை. காணி, பொலிஸ் அதிகாரங்கள் இன்னும் மாகாணசபைகளுக்கு வங்கப்படாமல் குறித்த அரசியலமைப்பையே இந்த அரசாங்கங்கள் மீறியுள்ளன. இவ்வாறான நிலைமையில் எமது புலம்பெயர் உறவுகள் எந்த நம்பிக்கையில் முதலீகளைக் கொண்டு வருவாடர்கள்.

21வது திருத்தச் சட்டத்தில் 13வது திருத்தச் சட்டத்தில் உள்வாங்கப்பட்ட சரத்துக்கள் பூரணப்படுத்தப்படுவதோடு, மாகாணங்களுக்கு நிதி அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும் என்பதை இன்று நாங்கள் வலியுறுத்துகின்றோம். இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கேட்க வேண்டும். தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளின் பிரதிநிதிகளும் கேட்க வேண்டும். மாகாணங்களுக்கு நிதி அதிகாரங்கள் இருக்குமாக இருந்தால் புலம்பெயர் உறவுகள் அந்த அந்த மாகாண அரசுகளுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு இங்கு முதலீடுகளை மேற்கொள்ள முடியும். ஏனெனில் புலம்பெயர் தேசங்களிலே தமிழர்கள் மாத்திரம் செல்வந்தர்களாக இல்லை. சிங்கள மக்களும் அங்குள்ளார்கள். அவர்களும் அவரவர் மாகாணங்களில் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். அந்த வகையில் இந்த நாட்டிற்கு டொலர்கள் வருவதற்கான சாத்தியக் கூறுகள் நிறைவே இருக்கின்றன.

அரசும் அரசை எதிர்த்து இன்று போராடும் போராட்டக்காரர்களும் இன்றைய இந்த பொருளாதார வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் என்ன என்பதைத் தெரிந்து வைத்திருக்கின்றார்கள். அதனைத் தீர்ப்பதற்காக முதலாவதாகப் பாடுபட வேண்டும். அதன் மூலம் தான் இந்த நாட்டில் தற்போதைய இடைக்கால பொருளாதார மீட்சிக்கு அப்பால் ஒரு நிரந்தரமான அமைதியை, பொருளாதார வளர்ச்சியைக் கட்டியெழுப்ப முடியும்.

கடந்த பாராளுமன்ற அமர்வின் போது சரத் வீரசேகர அவர்கள் குறுந்தூர் மலையிலே விகாரை அமைத்தல் தொடர்பில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் மிகவும் ஆவேசமான கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அவர்களது பெயரைக் குறிப்பிட்டுப் பேசியிருந்தார். சிங்களவர்களது பொறுமைக்கு எல்லையுண்டு என்று தெரிவித்திருக்கின்றார். கொழும்பிலே அதிகூடிய வாக்குகளைப் பெற்றவர் இன்று கொழும்பு வீதியிலே நடமாட முடியாமல் இருக்கின்றார். சிங்கள மக்களின் பொறுமை தொடர்பில இவர் கருத்துரைக்கின்றார்.

பௌத்த அடையாளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. பௌத்தர்கள் இல்லாத இடங்களில் விகாரைகள் அமைவதுதான் எங்களுக்குப் பிரச்சனை. இலங்கையிலே எத்தனை இடங்களில் இந்து அடையாளங்கள் இருக்கின்றன. அநுராதபுரம், பொலநறுவை போன்ற இடங்களிலே எத்தனையோ இந்து மன்னர்கள் வாழ்ந்த அடையாளங்கள், எச்சங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் இந்துக் கோயில்கள் கட்டப்படுகின்றனவா? இல்லை. அவைகள் மரபுரிமைச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படுகின்றன. அவ்வாறு பௌத்த அடையாளங்கள் பாதுகாக்கப்படுவதில் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனைகளும் இல்லை. ஆனால் நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? இந்த நாட்டிலே குறிப்பாக வடக்கு கிழக்கிலே எங்கு எங்கு உயர்ந்த மலைகள் இருக்கின்றதோ அங்கெல்லாம் புத்தர் சிலைகளையும் விகாரைகளையும் அமைப்பதற்கு முற்படுகின்றீர்கள். புத்தர் அவ்வாறு சொல்லவில்லை. புத்தர் புனிதமான மனிதர். அவரது மதத்தை சார்ந்த நீங்கள் மிகவும் அடாவடித்தனங்களைச் செய்கின்றீர்கள் என்பதே எங்களது நிலைப்பாடு என்று தெரிவித்தார்.

# இருதயபுரம் திரு இருதயநாதர் ஆலய பெருவிழாவின் முதல் நற்கருணை, உறுதிப்பூசுதல் வழங்கும் திருப்பலி!!







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் தொன்மை வாய்ந்த கிறிஸ்தவ ஆலயங்களுள் ஒன்றாக திகழ்ந்துவரும் இருதயபுரம் திரு இருதயநாதர் ஆலய பெருவிழாவினை முன்னிட்டு 25.06.2022 திகதி சனிக்கிழமை பங்குத் தந்தை அருட்பணி அலெக்ஸ் றொபர்ட் அடிகளார் தலைமையில் முதல் நற்கருணை, உறுதிப்பூசுதல் வழங்கும் திருப்பலி மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய பேரருட்திரு கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகையினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு 37 சிறார்களுக்கு முதல் நற்கருணை மற்றும் உறுதிப்பூசுதல் அருட்சாதனங்களும் வழங்கி வைக்கப்பட்டது.




# எரிபொருள் விலை அதிகரிப்பு: மட்டக்களப்பில் இப்படியோரு நல்லுள்ளமா?

(சுதா)

மட்டக்களப்பு நகரில் உள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு இன்று அதிகாலை 13,000 லீற்றர் பெற்றோல் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோலை கொள்வனவு செய்வதற்காக கடந்த இரவு முழுவதும் வாகனங்கள் சகிதம் பொது மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்த நிலையில் இன்று அதிகாலை பெற்றோல் கொண்டு வரப்பட்டுள்ளது.



இந்நிலையில் எரிபொருட்களின் விலைகள் (26) திகதி அதிகாலை முதல் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் பெற்றோலின் விலையானது 50 மற்றும் 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த இரவு முழுவதும் காத்துக்கிடந்த மக்களது கஸ்ட நிலையினை உணர்ந்த மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவரும் மட்டக்களப்பு ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளருமான முத்துக்குமார் செல்வராசா பழைய விலைக்கே தனது எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கொண்டுவரப்பட்ட பெற்றோலை விற்பனை செய்துள்ளார்.

இந்நிலையில் குறித்த ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 92 ஒக்டேன் பெற்றோலை பழைய விலையான 420 ரூபாவிற்கும் 95 ஒக்டேன் பெற்றோலை பழைய விலையான 450 ரூபாவிற்குமே விநியோகம் செய்துள்ளார்.

அதே வேளை குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மதகுருமாருக்கும், கடந்த 5 நாட்களாக எரிபொருள் இன்றி தமது சேவையை வழங்க முடியாதிருந்த மட்டக்களப்பு மாநகர சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அடங்கலாக 50 பேருக்கும் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை வழங்கியமையானது சிறந்ததொரு மனிதாபிமான செயற்பாடாக மட்டக்களப்பு மக்களால்

பார்க்கப்பட்டது மட்டுமல்லாது, குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரான முத்துக்குமார் செல்வராசா அவர்களுக்கு குறித்த எரிபொருள் நிலையத்திற்கு வருகை தந்த மதகுருமார், பொதுமக்கள், ஆட்டோ சாரதிகள் மற்றும் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் உள்ளிட்டோரினால் பாராட்டி நன்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இராணுவத்தினரும், பொலிஸாரும் கடமையில் ஈடுபட்டிருந்ததுடன், சீரான முறையில் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது.

# கதிர்காம பாதயாத்திரீகர்களுக்கு இராணுவம் பெருவரவேற்பு



(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட கதிர்காமம் பாதையாத்திரை குழுவினரை இராணுவத்தின் முல்லைத்தீவு மாவட்ட 54வது படைப்பிரிவு வரவேற்று உபசரித்தது.

முல்லைத்தீவு மாவட்ட இராணுவ தலைமையகத்துக்கு முன்னாள் பாதயாத்திரைக் குழுவினர் அன்போடு வரவேற்கப்பட்டனர்.

இராணுவம் அவர்களை வரவேற்று உபசரித்தது. பாதயாத்திரை குழுவின் தலைவரான சி.ஜெயராஜா நன்றி தெரிவித்தார்.

இறுதியில் குழுப் புகைப் படங்களை எடுத்தனர்.

# கிழக்கு ஆளுநர் மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை எனக் காட்ட முனைகிறார்

## இம்ரான் எம்.பி. பகிரங்க குற்றச்சாட்டு

**(ஹஸ்பர்)**

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யகம்பத் இந்தப் பொருளாதார நெருக்கடியால் கிழக்கு மாகாண மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை எனக் காட்ட முனைகின்றார் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்

ஊடகங்களுக்கு நேற்று (27) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது அவர் மேலும் குறித்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

எரிபொருள் நெருக்கடி காரணமாக இவ்வாரம் கிழக்கு மாகாணப் பாடசாலைகள் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்களில் மாத்திரம் நடைபெறும் என கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி என்.புள்ளநாயகம் தகவல் வெளியிட்டிருந்தார். சில மணித்தியாலயங்களுள் அதே மாகாணக் கல்விப் பணிப்பாளர் வாரத்தில் 5 தினங்களும் பாடசாலை நடைபெறும் என அறிவித்துள்ளார்.

அவரது இந்த பின்னைய அறிவிப்புக்கு கிழக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரையே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. எரிபொருள் நிரப்புவதற்காக அதிபர், ஆசிரியர்கள் நாட்கணக்கில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காத்து நிற்கின்றனர். மாணவர் பஸ்சேவைக்கு எரிபொருள் இல்லை. இதனால் தான் நகர்ப்புறப் பாடசாலைகளை பாடசாலைகளை மூடும் தீர்மானம் கல்வி அமைச்சினால் எடுக்கப்பட்டது.

இதே பிரச்சினை கிழக்கு மாகாணத்திலும் உண்டு. ஏராளமான ஆசிரியர்களினதும், கல்விப் புலத்தின் ஏனையோரினதும் மோட்டார் சைக்கிள்கள் பெற்றோல் இன்மையால் வீட்டிலே முடங்கியுள்ளது. இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஆளுநர் எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. ஆனால் பாடசாலைகளை வாரத்தில் 5 நாட்களும் நடத்த வேண்டுமென என அவர் பணித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என அவர் காட்ட முனைவதே அவரது இந்த முடிவுக்குக் காரணமாகும். அவரதும், அவரது பரிவாரத்தினரது வாகனங்களுக்கும் எரிபொருள் பிரச்சினை இல்லை என்பதால் ஏனையோருக்கும் அப்படி இருப்பதாகவே அவர் நினைக்கிறார். மக்களின் கஷ;ட நிலையை இன்னும் அவர் உணரவில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

இந்த அரசு சகல அரச உத்தியோகத்தர்களையும் வீதிக்கும், வரிசைக்கும் கொண்டு வந்து விட்டது. பல அரச உத்தியோகத்தர்கள் நாளாந்தம் எரிபொருள் வரிசைகளில் நிற்கின்றனர். இந்த நிலையை கிழக்கு ஆளுநர் உணர வேண்டும்

சுகாதாரத்துறையைச் சேர்ந்தோருக்கு வாரத்தில் ஒரு நாள் எரிபொருள் வழங்குவதாக அரசு அறிவித்தாலும் அதுவும் திருப்திகரமாக இல்லை. அந்த நாளில் அநேகமான சுகாதாரத்துறையினர் எரிபொருள் நிரப்பு நிலைய வரிசைக்கு வந்துவிடுகின்றார்கள். இதனால் வைத்தியசாலைகளில் சுகாதார சேவை பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளது. பல நோயாளர்கள் பாதிக்கப்படுகின்றார்கள்.

அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளே இதற்கு காரணமாகும். மக்களின் சுமையைக் குறைப்பதற்கு எந்தவொரு திட்டமும் ஜனாதிபதியிடம் இல்லை. அதேபோல பிரதமர் மற்றும் அமைச்சர்களிடமும் இல்லை. இதுவே மக்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்குக் காரணம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஓட்டமாவடியில் அதிபர்கள், ஆசிரியர்கள் வீதியை மறித்து போராட்டம்!





**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

பெற்றோல் வழங்குமாறு கோரிக்கை விடுத்து ஓட்டமாவடியில் நேற்று (27) வீதியை மறித்து போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்ட அதிபர் சங்கம் ஏற்பாடு செய்த இந்த பாரிய போராட்டம் அதன் தலைவர் எம்.ஐ.செய்னுலாப்தீன் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச சபைக்கு முன்னால் வைத்து நேற்று காலை 7.30 மணிக்கு ஆரம்பமான இந்த போராட்டம் மணிக்கூட்டு கோபுரம் வரை சென்று சுமார் இரண்டரை மணிநேரம் வரை தொடர்ந்தது.

இதனால், மட்டக்களப்பு - கொழும்பு வீதியின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. பெற்றோலை வழங்குமாறு கோரி சுலோகங்களை ஏந்தி போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார, ஓட்டமாவடி பிரதேச செயலக செயலாளர் வீ.தவராஜா, கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில், ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் ஆகியோர்கள் வருகை தந்தனர்.

மாணவச்சமூகத்தின் கல்வி செயற்பாட்டிற்காக அதிபர்கள், ஆசிரியர்களுக்கு அவசியம் பெற்றோல் வழங்கப்பட வேண்டும் எனும் கோரிக்கை விடுத்து பிரதேச செயலாளர்களிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

குறித்த பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பெற்றோல் வந்ததும் அதனை அதிபர்கள், ஆசிரியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளர்கள் வாக்குறுதி வழங்கி பின்னர் போராட்டம் கைவிடப்பட்டது.

இந்த போராட்டத்தில், ஓட்டமாவடி கோட்டத்திலுள்ள 27 பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# வருகின்ற சில நாட்களுக்கு இடையில் ஒலுவில் துறைமுகம் மீண்டும் திறந்து வைக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

**(நூருள் ஹுதா உமர்)**

எதிர்வரும் சில நாட்களுக்கு இடையில் ஒலுவில் துறைமுகம் மீண்டும் திறந்து வைக்கப்படும் என்று கடற்றொழில் வள அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த வாரம் ஒலுவில் துறைமுகத்துக்கு கள விஜயம் மேற்கொண்டு வந்து சென்ற இவரை ஞாயிற்றுக்கிழமை சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவர் தொடர்பு கொண்டு இது குறித்து பேசியபோதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு

இரண்டு வருடங்களுக்கு முன்பாகவே ஒலுவில் துறைமுகத்தை கடற்றொழில் வள அமைச்சு பொறுப்பெடுத்து விட்டது. ஆனால் இதை மீள இயங்க செய்கின்ற முயற்சிகள், முன்னெடுப்புகள் ஆகியவற்றில் குறுகிய சுய இலாப அரசியல்வாதிகளின் தடைகளை முறியடிக்க நேர்ந்தது.



தற்போது இயந்திரங்களின் சத்தத்தை இங்கு செவிமடுக்க முடிவது எனக்கு பெரு மகிழ்ச்சி தருகின்றது. நிறைவு கட்ட பணிகள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. இம் மாத இறுதிக்குள் துறைமுகத்தை திறந்து வைக்க வேண்டும் என்று விரும்பினேன். எதிர்வரும் 10-15 நாட்களுக்கு இடையில் துறைமுகத்தை திறந்து வைக்க முடியும் என்பது எனது நம்பிக்கை.

ஒலுவில் துறைமுகம் மீண்டும் இயங்க வைக்கப்படும் என்று தேர்தல் காலத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஸ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ ஆகியோர் இப்பிரதேச மக்களுக்கு வாக்குறுதி வழங்கி இருந்தார்கள். அதையும் நான் கையில் எடுத்திருக்கின்றேன்.

நான் இணக்க அரசியல் செய்பவன். சாணக்கிய அரசியலை முன்னெடுப்பவன். அதன் மூலமாக மக்ளின் தேவைகளை நிறைவு செய்து கொடுப்பவன். எனது அரசியல் சரணாகதி அரசியல் அல்ல.

சரணாகதி அரசியல் செய்தவர்கள்தான் தமிழ் மக்களை முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்குள் சிக்க வைத்தனர். அவர்களும் சரண் அடைந்து தமிழ் மக்களையும் சரண் அடைய வைத்து விட்டு இன்றும் நீலி கண்ணீர் வடித்து கொண்டிருக்கிறார்கள் என்றார்.

# தம்பலகாமம் பிரதேச செயலக பிரதேச மட்ட விளையாட்டு போட்டிகள் ஆரம்பம்





**(ஹஸ்பர்)**

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச மட்ட விளையாட்டு போட்டிகள் தற்போது ஆரம்பமாகியுள்ள நிலையில் உதைப்பந்தாட்ட போட்டிக்கான அங்குரார்ப்பண வைபவம் இடம் பெற்றது.

குறித்த அங்குரார்ப்பண நிகழ்வானது (26) முள்ளிப்பொத்தானை பாலிகா மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற உதைப் பந்தாட்ட சுற்றுப்போட்டியில் 15 அணிகள் பங்குபற்றியுள்ளதுடன் ஒவ்வொரு அணியும் ஒன்றையொன்று எதிர்தாட உள்ளனர்.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க விளையாட்டு உத்தியோகத்தர் கே.டி.ஹாரீஸ் தலைமையில் அனைத்து போட்டிகளும் இடம் பெற்று வருகின்றன.

மேலதிகமாக அத்திலாட்டிக், கூடை பந்து , கிரிக்கட் உட்பட பல விளையாட்டு தொடர்கள் பிரதேச மட்ட போட்டிகளாக இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மாகாண மட்ட சாதனையாளர்களுக்கு பாராட்டு கௌரவம்





**( காரைதீவு நிருபர் சகா)**

தமிழீழ மக்கள் விடுதலை கழகம் கடந்தவாரம் காரைதீவில் நடத்திய தளபதி அமரர் ம.சிவனேசன் அவர்களின் முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வில் ,தெற்காசிய தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் சாதனை படைத்த விளையாட்டு வீரர்கள், கல்வி ஊடகவியலாளர்கள், மற்றும் சமூக செயற்பாட்டாளரை பாராட்டி கௌரவித்தனர்.

கழகத்தின் அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் ரவிச்சந்திரன் சங்கரி தோழர் தலைமையில் காரைதீவு விபுலானந்த மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை கழகத்தின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் உள்ளிட்ட அதிதிகள் கலந்துகொண்டு பொன்னாடை போர்த்தி கௌரவத்தை வழங்கினார்கள் .

ஊடக துறைக்காக ஜனாதிபதி விருது பெற்ற ஊடகவியலாளர் வி.ரி. சகாதேவராஜா பொன்னாடை போர்த்தி ''ஊடகமாமணி ''என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் இக் கௌரவத்தை வழங்கினார்.

தொடர்ந்து, மாகாணத்திலே குண்டு போடுதல் நிகழ்வில் தங்கப் பதக்கம் பெற்ற பே.அனோஜன், ஹொக்கி நிகழ்வில் தேசிய சாதனை படைத்த த.லவன், தெற்காசிய கராத்தே போட்டியில் சாதனை படைத்த சௌ.பால்ராஜ், தேசிய மட்ட கராத்தே போட்டியில் சாதனை படைத்த ப.சரோன் சச்சின் ,மாகாண மட்ட கராத்தே போட்டியில் சாதனை படைத்த செல்வி.கு அட்சயா ,மாகாணமட்ட மல்யுத்தப் போட்டியில் சாதனை படைத்த சு.அஜித் ராஜ், மாகாணமட்ட பீச் கபடி போட்டியில் சாதனை படைத்த இ. நிரோஜன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விசேடமாக மரணித்த சமூக செயற்பாட்டாளர் செ.மணிச்சந்திரன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் 62 வது பொதுக்கூட்டம்!!

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலையின் 62 வது பொதுக்கூட்டம் எதிர்வரும் 05.07.2022 ஞாயிற்றுக்கிழமை வித்தியாலய நடராஜானந்தா மண்டபத்தில் காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சகல பழைய மாணவ அங்கத்தவர்களும் புதிதாக இணைந்து கொள்ள விரும்பும் பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கத்தினர் கேட்டுக்கொள்கின்றனர்.

மேற்படி கூட்டத்திற்கான வருகையை உறுதிப்படுத்துவோர் கீழ் குறிப்பிடப்படும்

தொலைபேசி இலக்கங்களுக்கு தங்களது வருகையை குறுந்தகவல் மூலம் தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளுமாறும் பழைய மாணவர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

077 2016 424
077 4051 811
071 4402 227

பழைய மாணவர் சங்கம்
சிவானந்தா தேசிய பாடசாலை
கல்லடி உப்போடை, மட்டக்களப்பு.

# சம்மாந்துறையில் கேன்களில் டீசல் ஏற்றிவந்த வடி ரக வாகனம் பொதுமக்களால் மடக்கிப் பிடிப்பு!





**(சம்மாந்துறை நிருபர் )**

சம்மாந்துறையில் சந்தேகத்துக்கிடமான முறையில் வடி ரக வாகனமொன்றில் 18 கேன்களில் டீசலை கொண்டு செல்ல முற்பட்டபோது பொதுமக்களால் மடக்கிப் முற்றுகையிட்டுள்ளனர்..

குறித்த எரிபொருள் நிலையம் ஒன்றினூடாக பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான பல சம்பவங்கள் நடைபெறுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் (27) நள்ளிரவு 12.30 மணியளவில் வடி ரக வாகனம் சம்மாந்துறை மணிக்கூட்டுகோபுரத்தால் கேன்களுடன் செல்வதை எரிபொருளுக்காக காத்திருந்த பொதுமக்கள் அவதானித்தாகதெரிவித்தனர்.

குறித்த வாகனத்தை சந்தேகத்தின் அடிப்படையில் மீண்டும் வரும் போது சம்மாந்துறைமணிக்கூட்டு கோபுரத்தடியில் எரிபொருள் பெறுவதற்காக காத்திருந்த பொதுமக்கள் குறித்த வாகனத்தைசுற்றி வளைத்து தடுத்து நிறுத்தி கேன்களை பரிசோதித்த போது சுமார் 18 கொள்கலன்களில் டீசல் நிரப்பப்பட்டுஇருப்பதை அறிந்த பொதுமக்களுக்கும் வாகனசாரதிக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

பின்னர் பொது மக்கள் பொலிஸாருக்கு தகவலை வழங்கியதன் பின் அங்கு வருகைதந்த சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எச் ஜெயலத் மற்றும் பொலிஸார் வடி ரக வாகனத்தை கைப்பற்றி அதில் உள்ள கேன்களில் டீசல்இருப்பதை உறுதிப்படுத்திய பின்னர் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்கு வடி ரக வாகனம் கொண்டு செல்லப்பட்டது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# ஐம்பது குடும்பங்களுக்கு உலர் உணவுப் போதிகள் வன்னி ஹோப் நிறுவனத்தினால் வழங்கி வைப்பு





**(ஹஸ்பர்)**

வேலைக்கான உணவு எனும் திட்டத்தின் கீழ் வன்னி ஹோப் மற்றும் தமிழ் போரம் மலேசிய நிறுவனங்களின் நிதி அனுசரணையில் திருகோணமலை மக்கள் சேவை மன்றமும் ஈவிங் பெண்கள் வலயமைப்பும் இணைந்து ஐம்பது குடும்பங்களுக்கு ஐயாயிரம் பெறுமதியான அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் தி/பாரதி தமிழ் வித்தியாலயத்தில் திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக உணவுக்காக கஸ்டப்பட்டும் போதுமான உணவின்மை காரணமாக பாடசாலையை விட்டு இடைவிலகின்ற மாணவர்களின் அளவைக் குறைக்கும் நோக்குடனும் பாரதி தமிழ் வித்தியாலயம், புதுக்குடியிருப்பு காந்தி முன்பள்ளி, வரோதயநகர் கிராம சேவகர் அலுவலகம் ஆகிய இடங்களில் சிரமதான நிகழ்வுகள் ஊடாக இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது.

திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளரின் நிந்தனையில் உருவான சுற்றுக் சூழலை பாதுகாத்து உணவுத் தேவையை நிறைவேற்றுவோம் எனும் கருப்பொருளின் கீழ் வேலைக்கான உணவு (புட் பேர் வேர்க்) எனும் விசேட வேலைத் திட்டத்தினூடாக இந்த பணிகள் முன்னெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்ட அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் ஊழல் மோசடி

## 12 வருடங்களாக குடும்ப ஆட்சி அனைத்துத்தரப்பினரும் போர்க்கோடி

**(பைஷல் இஸ்மாயில்)**

அம்பாறை மாவட்ட அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஆட்சி அதிகாரங்கள் ஒரு குறிப்பட்ட குடும்பத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்துகொண்டு கடந்த 12 வருடகாலமாக அதன் செயற்பாடுகள் யாவும் மழுங்கடிக்கப்பட்டு பாரியளவு ஊழல் மோசடிகளை செய்துவந்தவர்களின் கபடத்தனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அட்டாளைச்னை மாற்றத்திற்கான முன்னணியின் செயலாளர் அஸ்வர் சாலி தெரிவித்தார்.



அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் (25) மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு மீனோடைக்கட்டு மாற்றத்திற்கான முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், கடந்த 12 வருடங்களாக அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், தீகவாபி, திராய்க்கேணி போன்ற பிரதேங்களுக்கு செய்த சேவைகள் என்னவென்று பார்த்தால் அது பூச்சியமாகத்தான் இருக்கின்றது. 55 நபர்களைக் கொண்டு இயங்கிய அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இன்று 4 நபர்களைக்கொண்டு இயங்கி வருகின்றது. இதுதொடர்பில் எமது பிரதேச மக்கள் மிக ஆழமாக சிந்திக்கவேண்டும்.

மர்ஹூம் ஜமால்டீன் அதிபரின் காலத்தில் 55 பேரைக்கொண்டு இயங்கிய சங்கம் இன்று 4 பேராக இயங்கிவரக் காரணம் என்ன? இது பற்றி அன்று சிந்தித்தார்களா? அவ்வாறு சிந்தித்திருந்தால் அன்றே ஒரு மாற்றத்தை கொண்டுவந்திருக்க முடியும். இன்று பெரியதொரு போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், குடும்பத்தின் ஆட்சியாக நிலைநிறுத்தப்பட வேண்டும் என்ற சிந்தனையிலேயே அவர்களின் செயற்பாடுகள் இன்று வரை இருக்கின்றது. மக்கள் நலன் சார்ந்த விடயங்களைப் பற்றியோ, சங்கத்திற்கு இலாபம் ஈட்டுகின்ற செயற்பாடுகளைப் பற்றியோ ஒரு நாளும் சிந்தித்ததும் இல்லை, சிந்திக்கப்போவதும் இல்லை. அவ்வாறு சிந்தித்திருந்தால் ஏனைய பிரதேசங்களில் இருக்கின்ற பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களைப்போன்று இன்று முன்னிலை சங்கமாக இருந்திருக்கும்.

12 வருடங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களில் முதல் நிலையில் இருந்த அட்டாளைச்சேனை கூட்டுறவுச்சங்கம் இன்று சொல்லமுடியாத நிலையில் இருக்கின்றது. அதற்கான காரணங்களைச் தேடிப்பார்த்தால் அங்கு அநியாயங்களும், களவுகளும், கொள்ளைகளும், குடும்ப மாபியாக்களுமே இடம்பெற்றுவந்துள்ளது. குறிப்பாக, சுயநல இலாபம் கருதியும், குடும்பங்களையும், அவர்கள் சார்ந்தவர்களையும், முன்னேற்றும் செயற்பாடுகளிலேயே இருந்து வந்துள்ளார்கள். இந்த செயற்பாடுகளை மாறைப்பதற்காக 55 நபர்களைக் கொண்ட சபை உறுப்பினர்களை 4 பேராக இயங்க வைத்துள்ளார்கள்.

அவர்களின் இந்தப்போக்கை கண்டித்தும், எதிர்த்தும் அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், திராய்க்கேணி, திகவாபி போன்ற பிரதேச மக்கள் மாற்றத்திற்கான முன்னணியுடன் இணைந்து இன்று பாரிய போர்க்கொடியை எந்திவருகின்ற நிலைமை உருவாகியுள்ளது என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் மாற்றத்திற்கான முன்னணியின் தலைவர், பொருளாளர், உறுப்பினர்கள், கல்விமான்கள், உலமாக்கள், விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்கள், ஊர் நலன் விரும்பிகள் உள்ளிட்ட பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டதும் குறிப்பிடத்தக்கது

# எரிபொருளுக்கு காத்திருந்தவர்களை பஸ் மோதி ஐவர் காயம்!





**(மட்டு. துஷாரா)**

மட்டக்களப்பு - கொழும்பு வீதி ஊறணி பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்னால் எரிபொருளுக்காக வீதி ஓரத்தில் வரிசையில் காத்திருந்தவர்கள் மீது தனியார் பஸ் மோதியதில் ஐவர் படுகாயமடைந்ததுடன் 5 மோட்டார் சைக்கிள்களும் சேதமடைந்த சம்பவம் நேற்று (27) அதிகாலை இடம்பெற்றதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக நேற்று மாலையிலிருந்து கொழும்பு - மட்டக்களப்பு பிரதான வீதி ஓரத்தில் மோட்டார் சைக்கிள்களுடன் மக்கள் வரிசையில் காத்திருந்த இந்நிலையில் இன்று அதிகாலை 5.00 மணியளவில் தனியார் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றுகின்றவர்களை செங்கலடி பிரதேசத்தில் இருந்து ஆரையம்பதியை நோக்கி ஏற்றிச்சென்ற தனியார் பஸ்வண்டி வீதி ஓரத்தில் எரிபொருளுக்காக காத்திருந்தவர்கள் மீது மோதி விபத்துக்குள்ளானதில் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மட்டு.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் பஸ் சாரதி பஸ்ஸை நிறுத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து பஸ்ஸை பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றுள்ளதுடன் சாரதியை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கில் சாதனை படைத்த பற்றிமாவில் 275 புலமையாளர்களுக்கு பாராட்டு விழா





**( காரைதீவு சகா)**

கிழக்கில் பிரசித்தி பெற்ற கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் கடந்த2020 ஆம் ஆண்டு இடம் பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை படைத்து சித்திபெற்ற 275 மாணவர்களுக்கான பாராட்டு விழா நேற்று முன்தினம் அதிபர் அருட்சகோதரர் செபமாலை சந்தியாகோ அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக கிழக்குமாகாண பொது சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி மூத்த தம்பி கோபாலரத்தினம் கலந்து சிறப்பித்தார்.

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் 2020ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய 280 மாணவர்களில் 275 மாணவர்கள் சித்தி பெற்றிருந்தார்கள். எண்பத்தி ஏழு(87) மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சாதனை படைத்து இருந்தார்கள். அவர்களைப் பாராட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் கல்லூரியில் நடைபெற்றது . கிழக்கு மாகாணத்தில் தனியொரு பாடசாலை 87 புலமையாளர்களை தோற்றுவித்திருந்தது கல்முனை பற்றிமா கல்லூரி மாத்திரம் என்பதனை இவ்வண் குறிப்பிடலாம்.

விழாவில் பொது சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி மூத்ததம்பி கோபாலரத்தினம் அவர்கள் பதவி உயர்வு பெற்றமையை முன்னிட்டு மேடையில் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டப்பட்ட அம்சமும் இடம்பெற்றிருந்தது.

மேலும் சித்தி பெற்ற 275 மாணவர்களுக்கும் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டு இடம்பெற்றது.






# உத்தியோகத்தர்கள் தேவைக்கேற்ப மின்சாரப் பாவனை மற்றும் ஏனைய பாவனைகளை மிக சிக்கனமாக பயன்படுத்தவும்

## மாகாண ஆணையாளர் வேண்டுகோள்!

(பைஷல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுடனான கலந்துரையாடல் மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் தலைமையில் சுதேச மருத்துவத் திணைக்கள கூட்ட மண்டபத்தில் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில், சுதேச மருத்துவத் திணைக்கள திட்டமிடல் பிரிவு வைத்தியர் எஸ்.சதீஸ், கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாட்டில் தற்போது நிலவுகின்ற எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக எமது நாடு பாரிய சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. அதனால் எமது திணைக்களத்தில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் தேவைக்கேற்ப மின்சாரப் பவனை மற்றும் ஏனைய பாவனைகளை மிக சிக்கனமாக பயன்படுத்துமாறும், எமது திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகளை மிக விரைவாக வழங்க வேண்டும் என மாகாண ஆணையாளர் இதன்போது சகல உத்தியோகத்தர்களிடமும் கேட்டுக்கொண்டார்.

கடந்த பல வருடங்களாக சுதேச மருத்துவத் திணைக்களத்தில் கடமையாற்றி வேறு திணைக்களங்களுக்குச் சென்ற உத்தியோகத்தர்களை பாராட்டி அவர்களுக்கு ஞாபகச் சின்னம் வழங்கி வைக்கும் நிகழ்வு இன்றைய தினம் ஊழியர்கள் நலபுரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இதன்போது மாகாண ஆணையாளர் அவர்களினால் பரிசுப் பொதிகள் மற்றும் ஞாபகச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# யுத்த காலத்தில் கூட இப்படியான வரிசைகள் இருக்கவில்லை!

## மரியாதையாக வீடு செல்வதுதான் ஒரே வழி என்கிறார் கல்முனை விகாராதிபதி சங்க ரத்தன தேரர்

( வி.ரி.சகாதேவராஜா)



கடந்த கால யுத்தத்தை விட மோசமானது இன்றைய பொருளாதார நெருக்கடி நிலை. அந்த பாரிய யுத்தத்தின் பொழுது கூட இப்படி நீண்ட வரிசைகள் இருக்கவில்லை. இன்றைய நெருக்கடி இருக்கவில்லை. பயத்தின் மத்தியிலும் மக்கள் சந்தோஷமாக வாழ்ந்தார்கள்.

இவ்வாறு கல்முனை சுபத்திரா ராமய விகாராதிபதி வண ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர் தெரிவித்தார் .

அவர் நேற்று சமகால நெருக்கடி நிலைமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார். அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது.

இன்று மைதானத்தில் விளையாட வேண்டிய இளைஞர்கள் சந்தோஷமாக வாழ்க்கையை கழிக்க வேண்டிய இளைஞர்கள் பெட்ரோலுக்கும டீசலுக்கும் எரிவாயுவுக்கும் நாட்கணக்கில் வரிசையில் நின்று கொண்டிருக்கின்றார்கள் .

அரசாங்கம் மோசமான ஒரு நிர்வாகத்தை செய்ததன் காரணமாக இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த மக்கள் யாரை ஜனாதிபதியாக தெரிவு செய்தார்களோ அதே மக்கள் அதே நபரைவீட்டுக்குப் போ என்று இவ்வளவு தூரம் சொல்லியும் இன்னமும் அவர் போகவில்லை.

அதற்கு முட்டுக் கொடுக்க வந்த பிரபல நடிகர் ரணில் இது வரை சாதித்தது ஏதுமில்லை. அவரை எந்த மக்களும் தெரிவு செய்யவில்லை .தெரிவு செய்யாத ஒருவரை பிரதமராக்கியது ஜனாதிபதியின் முதல் முட்டாள்தனம் .

இந்த நிலை நீடித்தால் அதே மக்கள் செருப்பாலும் சாணியாலும் மலத்தாலும் அடித்து விரட்ட வேண்டி நேரிடும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன் .

எழில் மிகுந்த இந்த நாடு சீரழிந்து கொண்டிருக்கிறது. இதற்கு யார் காரணம் என்பதனை உலகமே அறிந்தது.

மக்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறார்கள். சிங்கள மக்கள் சந்தோசமாக சுற்றுலா சென்றவர்கள் நின்று நடு வீதியிலே படுத்து காலத்தை கடத்துகிறார்.

மக்களை பிச்சைக்காரனாக மாத்தி நாங்கள் கடவுளாக இருக்கலாம் இருக்கலாம் என்று நினைக்கிறார்கள் .

மதத் தலைவர்களுக்கு என்று ஒரு மரியாதை கூட இல்லை. மேடையிலே மாத்திரம் நான்கு மத தலைவர்களை அழைக்கிறார்கள்

இங்கு பெட்ரோல் நிலையங்களிலும் சரி ஏனைய இடங்களிலும் சரி ஒரு மருந்துக்கு கூட அந்த மரியாதையை காணவில்லை.

அவர்களுக்கான முன்னுரிமையை காணவில்லை. இனிமேல் கொண்டு பொது வைபவங்களில் மதத் தலைவர்களை ஒப்புக்காக அழைப்பதை நிறுத்துங்கள்.

மக்கள் இன்று மிக மோசமாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். சாப்பாட்டுக்கு வழியில்லாமல் தினமும் க்யூவில் நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை.

4 அல்லது 5 நாட்கள் தொடர்ச்சியாக பெற்றோலுக்காக வரிசையில் இருக்கின்ற கவலைக்கிடமான நிலை. அதற்கு ஒரே வழி கோட்டா வீடு போக வேண்டும் . ரணில் வீடு செல்ல வேண்டும் இந்த அரசாங்கம் தேவையில்லை .மக்கள் ஒரு தேர்தலை விரும்புகிறார்கள்.

நாட்டை நாங்கள் காப்பாற்றுவோம். நீங்கள் வீட்டிற்கு செல்லுங்கள். மக்கள் அடிமைகளாக வாழ வேண்டும் மனநோயாளிகளாக மாற வேண்டும் என்று நினைக்கின்றார்கள். பாராளுமன்றத்தில் இருக்கக்கூடிய 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் வெளியேற வேண்டும். மக்களைப் பற்றி சிந்திக்கின்றவர்கள் களவெடுக்காதவர்களை நாம் தெரிந்து பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் .

யாரும் எமக்கு தேவையில்லை. அரசாங்கம் உடனடியாக பதவி விலகி புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தி உலக நாடுகளின் உதவியை பெற்று பீனிக்ஸ் பறவை போல் மீண்டும் அழகான எமது நாடு செழிக்க வேண்டும் இதுவே எனது அவா. மக்களுக்கு உதவுங்கள் இந்த இக்கட்டான காலகட்டத்தில் புண்ணியம் கிடைக்கும் என்றார்.

## கடற்படையினர் சென்ற வாகனம் மோதி விபத்து: மூவர் படுகாயம்

(எப்.முபாரக்)



திருகோணமலை ஹபறன பிரதான வீதியின் கித்துல் ஊற்று என்னுமிடத்தில் கடற்படையினர் சென்ற கெப் வாகானம் டிப்பருடன் மோதியதில் மூன்று கடற்படை வீரர்கள் படுகாயங்களுடன் கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று (27) இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். கற்படை கெப் வாகானம் கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி சென்ற வேளையில் கந்தளாய் கித்துல் ஊற்று என்னுமிடத்தில் முன்னால் சென்ற டிப்பர் வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட போது இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர் ,

காயமடைந்த கடற்படை வீரர்கள் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றார்கள்.

# கல்முனை டியூட்டரிகளில் வகுப்புகள் நடைபெறும் தினங்களை மட்டுப்படுத்த தீர்மானம்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

பொருளாதார நெருக்கடி, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து செலவு என்பவற்றைக் கருத்தில் கொண்டு கல்முனை மாநகர பிரதேசங்களில் இயங்கி வருகின்ற தனியார் கல்வி நிலையங்களில் (டியூட்டரி) ஜீ.சி.ஈ.உயர்தர மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகள் நடத்தப்படுகின்ற நாட்களின் எண்ணிக்கையை 03 தினங்களாக மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கல்முனை மாநகர சபையில் நேற்று திங்கட்கிழமை (27) மாநகர முதலவர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் தலைமையில் நடைபெற்ற டியூட்டரி நிர்வாகிகளுடனான கலந்துரையாடலிலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தற்போதைய சூழ்நிலையில் ஒவ்வொரு நாளும் மேலதிக வகுப்புகளுக்கு செல்வதில் மாணவர்கள் எதிர்நோக்குகின்ற போக்குவரத்து பிரச்சினைகள் தொடர்பில் இக்கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக பொதுப் போக்குவரத்து வாகனங்களுக்கான தட்டுப்பாடு, முச்சக்கர வண்டிகளுக்கான அதிகரித்த கட்டணம், தனிப்பட்ட வாகனங்களாயினும் எரிபொருள் கிடைக்காமை உள்ளிட்ட காரணங்களினால் குறிப்பிட்ட சில காலத்திற்கு டியூட்டரிகளை மூடி, வகுப்புகளை இடைநிறுத்த வேண்டும் என்று பெற்றோர் தரப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் பரிசீலிக்கப்பட்டது. நாட்டு நிலைமை விரைவில் சீராகி விடும் என்ற நிச்சயம் இல்லாத நிலையில், வகுப்புகளை இடைநிறுத்துவதானது மாணவர்களின் கல்வியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் பாடத்திட்டத்தை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாத நிலைமை ஏற்படும் எனவும் சில டியூட்டரி நிர்வாகிகள் இதன்போது எடுத்துரைத்தனர்.

இந்நிலையில், வகுப்புகளை இடைநிறுத்தாமலும் வகுப்புகளின் எண்ணிக்கையை குறைக்காமலும் மாணவர்கள் வகுப்புகளுக்கு வருகின்ற நாட்களை குறைப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு, அதனை அடிப்படையாகக் கொண்ட தீர்மானம் டியூட்டரி நிர்வாகிகளின் இணக்கப்பாட்டுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதன்படி தற்போது 06 அல்லது 07 நாட்கள் வகுப்புகளில் பங்குபற்றுகின்ற ஒரு மாணவர் ஏதாவது 03 நாட்கள் மாத்திரம் வகுப்புகளுக்கு சமூகமளித்து, உரிய பாட வேளைகளை பூர்த்தி செய்யும் வகையில் இடைவேளை அடங்கலாக நேரசூசியை தயாரித்து, நடைமுறைத்துவது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை, கல்முனை மாநகராட்சி எல்லையினுள் சாப்புச் சட்டத்தின் பிரகாரம் வெள்ளிக்கிழமைகளில் எந்தவொரு தனியார் கல்வி நிலையமும் இயங்க முடியாது என்ற அறிவுறுத்தல் முதல்வரினால் இதன்போது வழங்கப்பட்டதுடன் இதனை மீறி, வெள்ளிக்கிழமைகளில் ஏதாவது தனியார் கல்வி நிலையம் இயங்குமாயின், அதன் நிர்வாகிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, கல்முனை நகரில் ஒரே பகுதியில் பல டியூட்டரிகள் இயங்குகின்ற நிலையில், வகுப்புகளுக்கு வருகின்ற மாணவர்கள் கலைந்து செல்லும்போது ஒழுங்கீனமாக நடந்து கொள்வதாகவும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்ட விடயமும் இதன்போது கலந்துரையாடப்பட்டு, அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் மாநகர சபை உறுப்பினர்களான ஹென்றி மகேந்திரன், சி.எம்.முபீத், கே.செலவராசா, கல்முனை மாநகர சபையின் கணக்காளர் கே.எம்.றியாஸ், வர்த்தக அனுமதிப்பத்திர பொறுப்பு உத்தியோகத்தர் யஹ்யா அரபாத், கல்முனை பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் அப்துல் வாஹித் உட்பட கல்முனை மாநகராட்சி எல்லையினுள் உயர்தர வகுப்புகள் நடத்தப்படுகின்ற டியூட்டரிகளின் நிர்வாகிகளும் பங்கேற்றிருந்தனர்.




## டாக்டர் முரளீஸ்வரனின் நூல் அன்பளிப்பு




கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி கவிஞர் டாக்டர் இரா. முரளீஸ்வரன எழுதிய 'என் மருத்துவமனை நாட்கள்' என்ற அமேரிக்காவின் உலக தமிழ் பல்கலைக்கழக விருது பெற்ற முதல் கவிதைத் தொகுதி நூல் நேற்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினரும் பிரபல சமூக சேவையாளருமான சந்திரசேகரம் ராஜன் அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டது அதன் பொழுது எழுத்தாளர் வி.ரி.சகாதேவராஜா மற்றும் திருமதி சுஜி ராஜன் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

படங்கள் காரைதீவு நிருபர்

# அக்கரைப்பற்றில் ஒருபாலின திருமண கோரிக்கை: இந்திய பெண்ணை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவு!

**(பைஷல் இஸ்மாயில், பாறூக் ஷிஹான்)**

ஒரு குழந்தையின் தாயாரான பெண் ஒருவரை திருமணம் செய்ய இலங்கைக்கு வருகை தமிழகப் பெண் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் ஜுலை மாதம் 29 ஆந்திகதி வரை குறித்த வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று(27) மீண்டும் குறித்த வழக்கு நீதிவானின் சமாதான அறையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட நிலையில் இரு பெண்களின் உளநல மருத்துவ அறிக்கை சமர்ப் பிக்கப்பட்டதையடுத்து அக்கரைப் பற்று நீதிமன்ற நீதிவான் எம்.எச். எம்.ஹம்ஸா முதலாவது சந்தேக நப ரான 19 வயது மதிக்கத்தக்க ஒன்றரை வயதான குழந்தையின் தாயாரை ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையில் விடுவித்து பெண்கள் காப்பகமொன் றில் அவரது குழந்தையின் எதிர்கால நலன் மற்றும் குறித்த பெண்ணின் நடத்தைகள் தொடர்பில் அறிக்கை கிடைக்கும் வரை ஒப்படைக்கு மாறும் எதிர்வரும் ஜுலை மாதம் 29 ஆந்திகதி வரை குறித்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அத்துடன் இரண்டாவது சந்தேக நபரான 24 வயது மதிக்கத்தக்க தமிழ் நாட்டின் குன்னத்தூரைச் சேர்ந்த பட்டதாரியான பெண் தொடர்பில் குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்படாமை யினால் அவர் தொடர்பில் முன்னி லையான சட்டத்தரணி, இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் ஒப்படைத்து சொந்த இடத்துக்கு மீள அனுப்புவதற்கு விடுத்த விண்ணப் பத்தை பரீசிலனை செய்த நீதிவான் இரண்டாவது சந்தேக நபரான தமிழ் நாட்டின் குன்னத்தூரைச் சேர்ந்த பட்டதாரியை விடுவித்து அனுமதி வழங்கினார்.

மேலும் எவ்வித குற்றச்சாட்டுகள் இன்றி விடுவிக்கப்பட்ட இரண்டா வது சந்தேக நபரான தமிழ்நாட்டின் குன்னத்துரைச் சேர்ந்த பட்டதாரியை அழைத்து செல்ல மட்டக்களப்பில் இருந்து வேன் ஒன்றில் பெண்கள் உரிமை தொடர்பான அமைப்பு ஒன்று பெண் சட்டத்தரணியுடன் வருகை தந்து அழைத்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், இவ்வழக்கில் பிரசன் னமாகி முதலாவது சந்தேக நபரான 19 வயது மதிக்கத்தக்க பெண்ணின் ஒன்றரை வயது குழந்தையின் எதிர் கால நலனை கருத்தில் கொண்டு நீ திவானின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். இவ்விடயத்தையும் மன்று கவனத்தில் எடுத்து தாய் மற்றும் குழந்தையை பெண்கள்காப்பகத்தில் வைத்து பராமரிக்குமாறு கட்டளை யிட்டது.

இந்த வழக்கில் முதலாவது சந் தேக நபரான 19 வயது மதிக்கத்தக்க பெண்ணின் முறைப்பாட்டாளர் களான பெற்றோர் கணவன் சார்பாக சட்டத்தரணிகளான ஏ.எம் ஜெனீர் மற்றும் எம்.ஐ றிஸ்வான் ஆகியோர் ஆஜராகினர்.

இரண்டாவது சந்தேக நபரான தமிழ்நாட்டின் குன்னத்தூரைச் சே ர்ந்த பட்டதாரியான பெண்ணுக்கு மட்டக்களப்பில் இருந்து பெண்கள் உரிமைக்கான அமைப்பொன்றின் அனுசரணையில் பெண் சட்டத்தரணி ஒருவர் ஆஜராகி இருந்தார்.

கடந்த புதன்கிழமை (22) அன்று இவ்விடயம் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப் பட்ட நிலையில் அக்கரைப்பற்று நீதிமன்றத்தினால் இரு பெண்க ளையும் இவ்வாறு உலநல மருத்து வரிடம் காண்பித்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதி மன்றம் உத்தர விட்டிருந்தார்.

இரு பெண்களையும் கல்முனை ஆதார வைத்தியசாலை மனநலப் பிரி வில் சேர்க்கப்பட்டு அங்கு அவர்க ளுக்கு பரிசோதனை மேற்கொள்ளப் பட்டு இதன் பின்னர் மேற்படி பெண்கள் இருவரும் நீதிமன்றக் கட்டளையின்படி விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதற்கமைய நேற்று (27) மீண் டும் குறித்த வழக்கு நீதிவானின் சமாதான அறையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் இரு பெண்களின் உளநல மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முத லாவது சந்தேக நபரான 19 வயது மதிக்கத்தக்க ஒன்றரை வயது குழந் தையின் தாயாரை ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையில் விடுவித்து பெண்கள் காப்பகமொன்றில் அவ ரது குழந்தையின் எதிர்கால நலன் மற்றும் குறித்த பெண்ணின் நடத்தை கோலங்கள் தொடர்பில் அறிக்கை கிடைக்கும் வரை ஒப்படைக்கு மாறும் எதிர்வரும் ஜுலை மாதம் 29 ஆந்திகதி வரை குறித்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை (20) இந் தியாவிலிருந்து இலங்கை வந்து அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தனது நண்பியைத் தேடி தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண் ஒரு வர் வந்துள்துள்ளதுடன் இருவரும் நண்பிகளாக தொலைபேசி மூலம் உரையாடி வந்ததாகவும் தற்போது திருமணம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்ததை தொடர்ந்து அக்கரைப் பற்று பெண்ணின் பெற்றோர் அக்க ரைப்பற்று பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர் .

மேற்படி பெண்கள்கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்தியா வில் திருமணம் செய்துள்ள நண்பி ஒருவர் மூலம் தொலைபேசியூடாக தொடர்பினை பேணியுள்ளதுடன் பெண்ணுக்கு திருமணமாகி ஒன்றரை வயது மகளும் கணவரும் உள்ளனர்.

# ஊடகவியலாளர்களை தாக்கினால் பின்விளைவு பெரும் அபாயமாக இருக்கும் என உணர்வுகளும் உண்டு

**( வாஸ் கூஞ்ஞ)**

தவறு செய்பவர்கள; பற்றி ஊடகவியலாளர் வெளிகொண ரும்போது தவறு செய்பவர்கள் முதலில் போடும் முதலீடு ஊட கவியலாரை அச்சுறுத்தல் ஆகும் ஊடகவியலாளர்களைதாக்கினால் பின்விளைவு பெரும் அபாயமாக இருக்கும் என உணர்வுகளும் உண்டு இலங்கையில் நிலவி வரும் பொருளாதார சிக்கலுடன் ஊடகத் துறையினர் குறிப்பாக வன்னி ஊட கவியலாளர்கள் பொருளாதார கஷ் டத்துடன் அவர்களின் தொழில் ரீதி யிலும் மிகவும் பாதிப்பு அடைந்து வருவதைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட 'மெசிடோ' நிறுவன மானது தெரிந்தெடுக்கப்பட்ட மன்னார் வவுனியா கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்க ளைச் சேர்ந்த 24 ஊடகவியலாளர் களுக்கு மூன்று தினங்கள் வதிவிட பயிற்சிகளும் அத்துடன் இவர்கள் மன அமைதியுடன் இருந்திடும் செயல் திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டிருந்தன.



திருகோணமலையில் சனிக்கி ழமை (25.06.2022) தொடக்கம் திங்கள் கிழமை (27.06.2022) வரை மன்னார் இணைப்பாளர் யூட் சன் பிகிராடோ தலைமையில் நடைபெற்ற இவ் நிகழ்வை 'மெசி டோ' நிறுவனத்தின் இணைப்பாளர் யூட்சன் பிகிராடோ இவ் நிகழ்வை ஆரம்பித்து வைக்கும்பொழுது அவர் தெரிவித்ததாவது

மேற்கூறப்பட்ட மாவட்டங் களைச் சேர்ந்த ஊடகவியலாளர் களாகிய நீங்கள் பல சவால்க ளுக்கு மத்தியில் உங்கள் ஊடகத் தொழிலை மேற்கொண்டு வரு கின்றீர்கள்

அதுவும் இக்காலக்கட்டத் தில் உங்கள் ஊடகத் தொழிலை முன்னெடுப்பதில் நீங்கள் பல சவால்களை சந்தித்து வருகின் றீர்கள். போக்குவரத்து கஷ்டம் மறுபுறம் பொருளாதார சிக்கல் அதிலும் உங்கள் தொழிலால் நீ ங்கள் சந்தித்துவரும் சுமைகளும் மன உலைச்சல்களும் அதிகரித்து வருவதை உணர்ந்து இந்த ஓரிரு தினங்களுக்காவது நீங்கள் மன அமைதியுடனும் உங்கள் ஊடக நண்பர்களுடன் உரையாடி மன மகிழ்ச்சியுடன் இருக்கவுமே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதுக் கான காரணம் என தெரிவித்தார்.

இங்கு இவ் ஊடகவியலாளர்க ளுக்கு நடாத்தப்பட்ட பாசறையில் இரு தினங்களாக வளவாளராக செயல்பட்ட மனித உரிமை செயற் பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ கருத்து தெரிவிக்கையில்;

ஊடகத்துறையினர் பல சவால் களை சந்தித்து வருகின்றனர். ஆனால் ஊடகவியலாளர்களின் பலம் குறைந்து செல்லகின்றது. இது ஊடகவியலார்களுக்கு மட்டு மல்ல ஏனைய அரசு சார்பற்ற நிறு வனங்களுக்கும் உண்டு.

நானும் ஒரு ஊடகத்துறையைச் சார்ந்தவன். நாம் இக்காலக்கட் டத்தில் நாம் ஊடகத்தின் செயல் பாட்டை மிக நுணுக்கமாக பார்க்க வேண்டும் நாம் இங்கே எமது அனுபவங்களை பகிர்ந்து கொள் ளும் போது இது அனைவருக்கும் பகிர்ந்து கொள்ள முடியும்

இன்றைய சூழலில் எமது பாது காப்பு பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும் நாம் எமது பாதுகாப்பை எப்படி உறுதிப்படுத்தப்பட வேண் டும் என பார்க்க வேண்டும்

இவற்றை பார்க்கும் போது எமது தனிப்பட்ட பாதுகாப்பு மட்டும் அல்ல மாறாக இது எமக்கு தகவல் தருபவரின் ஏனைய ஊடகவிய லாளர்கள் உதவி செய்பவர்கள் என் பவர்களும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என நாம் சிந்தித்து செயல்பட வேண்டும் அத்துடன் எமது நிறுவனத்தையும் பாதுகாப் புக்கு உறுதிப்படுத்தப்பட வேண் டும்

நாம் இவ்விடத்தில் மூன்று வித மாக சிந்திக்க முடியும் பாதுகாப்பு அடுத்து எவவாறு புலனாய்வு மூலம் செய்திகள் சேகரிப்பது அடுத்து ஐக்கிய நாடுகளுக்கும் ஊடகத்திற்கும் உள்ள தொடர்பு இவற்றுடன் எமது அலுவல்களை பற்றி பகிர்ந்து வருவது தொடர் பாகவும் ஆராய உள்ளோம் ஊட கவியலாளர்கள் எப்பொழுதும் கூர்ந்து கவனித்து செயல்பட வேண்டியவர்கள் சேகரிக்கப்படும் ஊடக செய்திகளை வகைப்படுத்தி இருக்க வேண்டும் இவற்றை நம் பிக்கை உள்ளவர்களிடம் பகிர்ந்து கொள்வது நலம் ஒரு ஊடகவிய லாளரணீன் பாதுகாப்பு விடயத்தை நோக்கும்போது முதலாவது அச்சு றுத்தல் இது உடல் உள பொருட்கள் அச்சுறுத்தலாக இருக்கலாம்

இந்த அச்சுறுத்தல் இடம் பெறா விட்டாலும் இது ஒரு மன உளைச் சலையும் பயத்தையும் எமக்கு உரு வாக்கலாம் ஒரு ஊடகவியலாளரை அடிப்பேன் எனக்கூறி அச்சுறுத்துப வர் அடிப்பதை விட அச்சுறுத்தலை ஒரு ஊடகவியலாளரை பாதிப்ப டையச் செய்யும் என்பது நமக்குத் தெரியும் தவறு செய்பவர்கள; பற்றி ஊடகவியலாளர் வெளிகொ ணரும்போது முதலில் போடும் முதலீடு ஊடகவியலாரை அச்சுறுத் தல் ஆகும் ஊடகவியலாளர்களை தாக்கினால் பின்விளைவு பெரும் அபாயமாக இருக்கும் என உணர் வுகளும் உண்டு.

ஊடகவியலாளர் எமக்கு அச்சு றுத்தல்கள் வந்தாலும் நாம் முன் எச்சரிக்கையாக இருந்து செயல்பட வேண்டும் அத்துடன் அச்சுறுத்த லுக்கு அஞ்சாது இருந்து செயல் படும் மனத் தைரியத்தடன் இருக்க வேண்டும்.

அதேசமயம் எம்மை பாதுகாத் துக் கொள்ளவும் நாம் ஈடுபட வேண்டும் ஊடகத்தினர் புலன் விசாரணை மூலம் எவ்வாறு தகவல் பெற வேண்டும் என்பதும் இங்கே ஆராயப்பட்டது

இன்று நாட்டில் கடத்தப்படும் போதைப் பொருட்கள் ஒரு முடி வுக்கு கொண்டு வர வேண்டும் என ஊடகவியலாளர்கள் முயற்சி க்கின்ற போதும் இது வெற்றியளிக் காமல் விடலாம்

ஏனென்றால் இதில் அரசியல் வாதிகள் பாதுகாப்பு தரப்பினர் ஈடு பட்டு வருவதும் வெளிச்சத்துக்கு வந்துள்ளன

இவற்றை ஊடகவியலாளர்கள் நிறுத்துவதற்கு எடுக்கும் முயற்சி வெற்றி அளிக்காவிட்டாலும் குறைப்பதில் ஒரு வாய்ப்பு இருக் கின்றது.

ஒரு பொதுமகன் போதைப்பொ ருள் கடத்துவது செய்தி பொதுமக் கள் மத்தியில் ஆச்சரியத்தை உரு வாக்கடவிட்டாலும் அரசியல்வா திகள் பாதுகாப்பு படையினர் இவ் வாறான குற்றங்களில் ஈடுபடுவது பற்றி வெளிக் கொணரும்போது மக்கள் ஆர்வமுடன் வாசிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்

ஆகவே இவ்வாறான குற்றச் செயல்கள் நடைபெறும் பொழுது அதை ஒரு ஊடகவியலாளரால் தடுக்க முடியாவிட்டாலும் அவர் குற்றங்களை குறைப்பதில் ஊடக வியலாளரடல் முடியும் என தெரி விக்கப்பட்டது.

இவ் பயிச்சி பட்டறையில் ஊட கத்துறையின் பல்கலைக்கழக விரிவிரையாளர் திருமதி டினித்தி ரத்னாயக்காவும் கலந்து கொண்டு ஊடகவியலாளர் எவ்வாறு ஒரு செய்தியை புலனாய்வு செய்து அறிக்கையிடுவது என்பது பற்றியும் இங்கு தெளிவுப்படுத்தினார் என் பதும் குறிப்பிடத்தக்கது.



# எதிர்வரும் ஆடி பெருவிழாவுக்காக பக்தர்கள் தற்பொழுது வந்த வண்ணம் காணப்படுகின்றனர்

**( வாஸ் கூஞ்ஞ)**

எதிர்வரும் ஆடி பெருவிழாவுக்காக பக்தர்கள் தற்பொழுது வந்த வண் ணம் காணப்படுகின்றனர். இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் இவ் விழாவில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது என இது தொடர்பாக நடைபெற்றக் கூட் டத்தில் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் ஆடி மாதம் இரண் டாம் திகதி (02.07.2022) நடைபெற இருக்கும் மன்னார் மறைமாவட்டத் தின் யாத்திகர் ஸ்தலமாக விளங்கும் மருதமடு அன்னையின் பெருவிழா தொடர்பாக மடு பரிபாலகர் கேட் போர் கூடத்தில் இது தொடர்பான ஆயத்த கலந்துரையாடல் நடை பெற்றது.

திங்கள் கிழமை (27.06.2022) மன் னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலை மையில் நடைபெற்ற இவ் கூட்டத் தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மடு பரிபாலகர் அருட்பணி பெப்பி சே ாசை அடிகளார் மற்றும் இது தொடர் பான திணைக்கள அதிகாரிகள் மற் றும் பாதுகாப்பு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இவ் ஆடிமாத பெருவிழாவுக்கு குறைந்தது இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள் வார்கள் என எதிர்பார்க்கப்படுவதா கவும் இவ் விழாவை முன்னிட்டு ஏற்கனவே மடுத் திருதத்தலத்தி லுள்ள 350 வீடுகளும் பக்தர்களால் பெறப்பட்டுள்ளதாகவும்

தற்பொழுது விழாவுக்கான கொடி யேற்ற நாளிலிருந்து இதுவரைக்கும் 300 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்காலிக கூடாரங்கள் அமைத்துள்ள துடன் தொடர்ந்து பக்தர்கள் வருகை தந்த வண்ணம் காணப்படுவதாகவும்

வருகை தருபவர்களுக்கான உண வுகள் கிடைக்கக்கூடிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்தாகவும் மற்றைய வசதிகள் திருப்திகரமாக நடைபெற்று வருவதாகவும்

-ஆலயப் பகுதிக்குள் உணவு பொருட்கள் விற்பனை செய்வோர் கூடிய விலைக்கு விற்பனை செய் வதால் பக்தர்கள் முறையீடு செய்து வருகின்றமையால் இவற்றை கவ னத்தில் எடுக்க வேண்டிய நிலை காணப்படுவதாக மடு பரிபாலகர் இவ் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்

இதைத் தொடர்ந்து இது தொடர் பாக கண்காணிக்க பாவனையாளர் அதிகார சபையின் அதிகாரிகளை செவ்வாய் கிழமை (28.06.2022) முதல் கண்கானிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இவ் கூட்டத் தில் தீர்மானிக்கப்பட்டது.

மற்றும் மடு ஆலயப் பகுதிக் குள் ஒழுக்க சீர்கேடுகள் நடைபெ றாதிக்கும் முகமாக பலத்த பாது காப்புக்கள் கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்

நுளம்புத் தொல்லைகள் ஏற்படா திருக்கும் முகமாக சுகாதார சேவை திணைக்களத்தால் நுளம்புக்கான மருந்து விசிறிகள் தெளிக்கப்பட்டு உள்ளதாகவும்

தொடர்ந்து நுளம்பக்கான மருந்து விசிறுவதற்காக இதற்கான எரிபொ ருள் மடு பிரதேச செயலாளருக்கூ டாக அரச அதிபரால் வழங்கப்பட்டு வந்ததுக்கு நன்றியும் இதில் தெரிவிக் கப்பட்டதுடன்

மடு ஆலயத்துக்கு 10 நுழைவாயில் கள் இருக்கின்றபோதும் தற்பொ ழுதுள்ள பக்தர்களின் வருகையை கவனத்துக்கு எடுத்த நிலையில் இது வரை 6 நுழைவாயில்கள் திறந்து விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# கண்மூடித்தனம் வேண்டாம்: பதவி விலகுங்கள்

மக்களின் தேவைகளை நிறை வேற்ற முடியாவிட்டால், டுவிட் டர் செய்திகள் மூலம் மன்னிப்பு கேட்காமல் உடனடியாக பதவி விலகுமாறும், அவ்வாறு பதவி விலகும் பட்சத்தில் ஐக்கிய மக் கள் சக்தியின் திறமையான நாடா ளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு நாட்டைக் பெறுப் பேற்பதாகவும், கோடிக்கணக் கான மக்களின் ஜனநாயகக் அபிப்பிராயத்தின் படி, அடுத்த ஐந்தாண்டு காலத்திற்குள் நாட்டை மீண்டும் பழைய நிலைக்கு நிச்சயம் கட்டியெழுப் புவதாகவும், மோசடி அல்லது ஊழலுக்கு இங்கு இடமிருக்காது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று (27) தெரிவித்தார்.

ஒரு சூப்பர் பிரதமரைக் கொண்டு வந்து நாட்டைக் கட் டியெழுப்ப அரசாங்கம் நடத்திய பொய் நாடகங்கள் அனைத்தும் தற்போது மக்களிடம் அம்பல மாகியுள்ளதாகவும், இவ்வா றானதொரு நிலை இருந்தும் அவ் அப்போதைய நேரத்தை சமாளிக்க பொய்களை கூறும் அரசாங்கத்தின் அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று எரிவாயு, எரிபொருள், பால் மா கேட்டு போலி நாடகத்தை ஆரம்பித்துள்ளார் எனவும், இவ் வாறான பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றுவதை நிறுத் துமாறும் கோரிய எதிர்க்கட்சி த் தலைவர் சஜித் பிரேமதாஸ, கோப் குழுவில் முறையற்ற அழுத்தம் பிரயோகித்தவர்களை அம்பலப்படுத்துவது கோப் குழுத்தலைவரின் பொறுப் பாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேபோல், 5 மாதங்களில், 10 மாதங்களில் நாட்டைக் கட்டி



யெழுப்புவோம் எனக் கூறும் போலியான ஏமாற்று நூல் சாஸ்திரத்திர விளையாட்டை நிறுத்தி, நாடு இழந்த நன்ம திப்பை மீட்டெடுக்க மக்கள் அபிப்பிராயங்களுக்குச் செவிச ாய்த்து பதவி விலக வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை இன்று எதிர்கொள் ளும் மிக மோசமான பொருளா தார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடிக்கு தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டு, நவீன இலங்கையை கட்டமைக்க மக்கள் கோரும் சமூக மாற்றத் திற்காக ஒரு உடன்பாட்டை எட்டுவதற்காக மறுசீரமைப்புக ளுக்கான தேசிய திட்டம் ஸ்தா பிக்கப்பட்டுள்ளதோடு, இந்த கருத்தாடலை மேலும் விரிவுப டுத்தும் முகமாக ஒன்றிணைந்த மறுசீரமைப்புகளுக்கான செய லகமொன்று (27) எதிர்க்கட்சி த் தலைவர் அலுவலகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் மக் கள் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானவர்களின் பங்கேற் புடன் திறந்து வைக்கப்பட்டது. இதன் பொதுச் செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





# நோயற்ற வாழ்க்கைக்கு யோகா சிறந்தது

இயற்கை எப்போதுமே அமைதியானது. ஆனால் உலகில் இயற்கையை குழப்ப மனிதன் ஈடுபட்டு கொண்டிருக்கின்றான். அதனால் நிம்மதி இல்லை.அனர்த்தங்கள் சூழ்கின்றன. நிம்மதியாக வாழ்வதற்கு உடல். உள வலிமை அவசியம். அதனை வழங்கி நோயற்ற வாழ்க்கைக்கு இட்டுச் செல்வது யோகாசனம் ஆகும் .இந்துமதத்தின் தனித்துவமான யோகாசனம் இன்று உலகிலே அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கின்றது .

இவ்வாறு காரைதீவில் நடைபெற்ற சர்வதேச யோகா தினத்தில் கலந்து கொண்ட இந்து ஸ்வயம் சேவக சங்க பாண்டிருப்பு பொறுப்பாளர் பிஆர் .தர்மராஜா குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச யோகா தினம், காரைதீவு லட்சுமி அம்பாள் மண்டபத்தில் அம்பாறை மாவட்ட இந்து ஸ்வயம் சிவசங்கர் பொறுப்பாளர் இரா. குணசிங்கம் ஜி தலைமையில் நடைபெற்றது.

கல்முனையிலும் ,காரைதீவிலும் சர்வதேச யோகா தினம் இவ்வாரம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

அங்கு அவர் உரையாற்றுகையில்.

பணத்தை மையமாக வைத்து பொருளாதார ரீதியில் அபிவிருத்தியைக் காண மனிதன் முற்பட்டான். அதனால் மனித குலம் இன்று சீரழிந்து கொண்டிருக்கிறது.

மனித மனத்தை சிந்திக்கத் தவறி விட்டான். வெளிநாடுகளில் இயந்திரத்தை மையமாக வைத்து ஆராய்ச்சி செய்ய, கீழைத் தேய நாடுகளில் மனிதனுடைய மனதில் நுழைந்து ஆராய்ச்சி செய்ய முற்பட்டது.

மனிதனுக்கு சாந்தித்தியம் தேவை. சாந்தித்யமில்லாத இடத்து அவரோ சமூகமோ நிம்மதியாக நிலையாக வாழ முடியாது.

மனிதகுலம் இன்று அமைதியை இழந்து நிற்கிறது. இந்து தர்மம் தனக்கென்று கண்டு பிடித்த தத்துவங்கள் மார்க்கங்களை எல்லாம் உலகிற்கு ஈர்ந்து வருகின்றது.

அதனால் இன்று இந்து சமூகத்தின் பால் வெள்ளைக்காரர்களும் கூட ஈர்க்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள்.

உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்தும் ஒருவர் தான் உலகை வெல்கிறார். அவரால் தான் உலகு பயன்படுகின்றது.

மூடநம்பிக்கையும் மதவெறி யும் உலகை அழித்துவிடும் என்று கூறுகின்றார் பகவான் ராமகிருஷ்ண



பரமஹம்சர் .

உடலை வலிமையாக்குவது யோகாசனம் மனதை வலிமையாக்குவது தியானம்.உடல் இரும்பு போன்ற வலிமை உடையதாக இருக்க வேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

அந்த காலத்தில் சித்தர்கள் இந்த மனதைத் தேடி அலைந்தார்கள். அவர்களுக்குள்ளேயே அந்த நிம்மதி



தேடி வந்தது.

இந்து தர்மத்தின் தனித்துவமானது இந்த யோகாசனம் .அதனை உலகிற்கு ஈர்ந்து அளிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. இந்து மதம் உலகத்திற்கு இந்த யோகாவை அறிமுகப்படுத்தியது. அதனால் இன்று சர்வதேச யோகா தினம் ஜூன் மாதம் 21ஆம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்துகின்ற சிறந்த பயிற்சி யோகா. மகாபாரதத்தில் கிருஷ்ண பரமாத்மாவிடம் கேள்விவருகின்றது. ஒருவர்தனது உள்ளத்தை கட்டுப்படுத்துவதானால் தொடர் பயிற்சியும் பற்றற்ற நிலையும் வேண்டும் . என்று பதில் வருகிறது.

அந்த வகையிலே இந்த யோகாவையும் தியானத்தையும் ஒருங்கி செய்யும் பொழுது எங்களை நாங்களே கட்டுப்படுத்திக் கொள்ளலாம் .அது மாத்திரமல்ல நோயற்ற வாழ்க்கைக்கு அது இட்டுச் செல்லும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை .

இன்று மனிதன் ஒழுங்கற்ற வாழ்க்கை முறை ஒழுங்கற்ற உணவு முறை ஒழுங்கான நேர முகாமைத்துவம் இல்லாமல் தனது வாழ்க்கையை சீரழித்து வருகின்றார்கள். அதன் பலனாகவே நிம்மதி இழக்கப்பட்டு இருக்கின்றது.

ஆகவே அதிலிருந்து நாங்கள் விடுபட வேண்டுமாக இருந்தால் யோகாவையும் தியானத்தையும் செய்து நாங்



**உதவிக் கல்விப்பணிப்பாளர்**
**வி.ரி.சகாதேவராஜா**
**(காரைதீவு நிருபர்)**

கள் சிறப்புற வாழ வேண்டும் நன்றி

நிகழ்வில், யோகாசனப் பயிற்சி அதன் முக்கியத்துவம் பற்றிய சொற்பொழிவு ,அமுத கானம் போன்றன இடம் பெற்றன.

நிகழ்வில் ,காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ,காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், உதவி கல்வி பணிப்பாளர் விரி.சகாதேவராஜா உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள். அக்கரைப்பற்று ,பாண்டிருப்பு, கல்முனை போன்ற பகுதிகளிலிருந்து இந்த நிகழ்விற்கு மாணவர்களும், பெரியோர்களும் வருகை தந்திருந்தார்கள்.

**கல்முனையில்....**

இதேவேளைசர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் ,யோகா தின நிகழ்வு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கல்முனை உவெஸ்லி உயர்தர தேசிய பாடசாலை மைதானத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ,திருமுன்னிலை அதிதி ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்தா ஜீ ( இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு) முன்னிலையில் சிறப்பாக இடம் பெற்றது.

இந்துமதம் உலகத்திற்கு அளித்த பெரும் பொக்கிஷம் யோகா. மனதை கட்டுப்படுத்தவும், உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் யோகா மிக மிக அவசியமாகின்றது. யோகா செய்தவன் உலகை வெல்வான்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ. எம்.டக்ளஸ் தெரிவித்தார்.

கல்முனையில் நடைபெற்ற சர்வதேச யோகா தின வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்..

சிறு பிள்ளைகள் தொடக்கம் முதியவர்கள் வரை 1500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட ஆன்மிக நிகழ்வில் காலை பொழுதில் பேசுவதில் பெருமையடைகிறேன்.

அம்பாறை மாவட்டத்தில் இந்து சமயம் சார்ந்த நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடந்து வருவதில் சந்தோஷம் அடைகிறேன்.

இராம கிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு மாநில தலைவர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ் ஆசியுரை ஆற்றுகை யில்...

எமது உடல் ஆரோக்கியமாகவும், எமது என்பு வலிமையாகவும் இருக்க வேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் அன்றே சொன்னார். மனதை கட்டுப்படுத்துவதற்கு யோகாசனம் மிகவும் பயனுள்ளது. யோகாவைப் பயின்றவர்கள் மனதைக் கட்டுப்படுத்தி உலகையே வெல்வார் என்றால் மிகையல்ல.

அறநெறி மாணவர்கள்சிறுவயதிலிருந்தே யோகாவை பயின்று கொண்டால் வாழ்க்கையில் சிறக்கும். ஆரோக்கியமாக நிம்மதியாக வாழ்வதற்கு இது உதவும் . என்றார். இந்நிகழ்விற்கு திரு முன்னிலை அதிதியாக இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர்

ஸ்ரீமத் சுவாமி தட்ஷஜானந்தஜீ மகராஜ் , பிரதம அதிதியாக அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.எம்.ஏ.டக்லஸ் , கௌரவ அதிதியாக அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்

வே .ஜெகதீசன் , சிறப்பு அதிதிகளாக

நாவிதன்வெளி பிரதேச செயலாளர்

சோ. ரங்கநாதன்,காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன்,

நாவிதன்வெளி உதவி பிரதேச செயலாளர். பே.பிரணபரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர் கு. ஜெயராஜ் ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

யோகாசன பயிற்சிகளை யோகாச்சாரியார் கா.சந்திரலிங்கம் வழங்கியிருந்தார்.

பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பல நூற்றுக்கணக்கானோர் யோகாசனப் பயிற்சியில் பங்குபற்றியிருந்தனர்.







திருக்கோணமலை பன்குளம்

# அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய

## ஆவர்த்தன அஷ்ட பந்தன ஏககுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் - 2022

| கிரியாரம்பம் | எண்ணெய்க்காப்பு | கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 04-07-2022 திங்கட்கிழமை | 05-07-2022 செவ்வாய்க்கிழமை | 06-07-2022 புதன்கிழமை காலை 9.00 - 10.30 மணி வரை |

சைவப்பெருந்தகையீர்!

இந்து சமுத்திரத்தின் முத்தாக திகழும் இலங்காபுரியின் கிழக்கே சைவமும் தமிழும் தழைத்தோங்கும் திருக்கோணமலை மாவட்ட பன்குளம் 4ம் கண்டம் பகுதியில் பன்னெடுங்காலமாக வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் மூலமூர்த்தியான ஸ்ரீ நாகதம்பிரானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் புதிதாக ஆலயம் அமைக்கப்பட்டு நிகழும் மங்களகரமான சுபகிருது வருடம் ஆனி மாதம் 22ம் நாள் (06.07.2022) புதன்கிழமை காலை 9.00 மணி முதல் 10.30 மணி வரை உள்ள அத்த நட்சத்திரமும், ஸப்தமி திதியும் கன்னி லக்கினமும் கூடிய சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அடியார்கள் அத்தருணமும் அதற்கு முன்னும் பின்னும் நடைபெறும் கிரியா காலங்களில் கலந்து நாகதம்பிரானின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக.

### கும்பாபிஷேக கிரியா கால நிகழ்வுகள்

**ஆனி 20ம் நாள் திங்கட்கிழமை (04.07.2022)**

காலை 9.00 மணிக்கு கிரியை ஆரம்பம், விநாயகர் வழிபாடு, வருண கும்ப பூஜை, பஞ்சகவ்விய பூஜை, புண்ணிய யாக வாஜனம், அனுக்ஞை, திரவியசுத்தி, திரவிய விபாகம், கணபதி ஹோமம், நவக்கிரகஹ ஹோமம், சாந்தி ஹோமம், திசா ஹோமம், மூர்த்தி ஹோமம், ரக்ஷோக்னஹோமம், சூரியாக்கினி, கங்கா தீர்த்தம், விபூதி பிரஸாதம் வழங்கப்படும். மாலை 5.00 மணிக்கு சமூக கணபதி ஆராதனை, கிராமசாந்தி, வாஸ்து சாந்தி, பிரவேச பலி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், கும்பம் யாகசாலா பிரவேசம், யாகபூஜை, அக்னி கார்யம்.

**அக்னி பூஜை**

மாலை 6.00 தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம் நடைபெறும்
இரவு 9.00 – 10.00 சுவாமி பிரதிஸ்டை செய்தல்

**ஆனி 21ம் நாள் செவ்வாய்க்கிழமை (05.07.2022)**

காலை 6.00 கோதூலிகா முகூர்த்தத்தில் யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்ட பந்தனம் சாத்துதல் நடைபெறும். விசேட சந்தி, யாகபூஜை, பூர்ணாகுதி, தீபாரதனை, விபூதி பிரசாதம் வழங்கல், மாலை விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாஜனம், சிவோ கும்பாவனம், யாகசாலா பிரவேசம், யாகபூஜை அஷ்டோத்திர ஹோமம், பரிவாரமூர்த்திக் கும்பபூஜை, பூர்ணாகுதி, தீபாரதனை.

**ஆனி 22ம் நாள் புதன்கிழமை (06.07.2022)**

அதிகாலை 5.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, யாக பூஜை, மஹா பூர்ணாகுதி, தீபாரதனை, வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம், நாத கீத சமர்ப்பணம், அஞ்சலி, பலிபலி, யாத்திராதானம், சர்வமங்கள வாத்திய சகிதம், பிரதான கும்பம் வீதி பிரதட்சணம், தூபி அபிஷேகம் கும்பம் ஆலய பிரவேசம் 9.00 மணி முதல் 10.30 மணி வரை உள்ள சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து தசமங்கள தரிசனம், எஜமான் அபிஷேகம், மகாபிஷேகம், ஆசியுரை விபூதி பிரசாதம் வழங்கப்படும். மாலை 6.00 மணிக்கு விசேட பூஜையைத் தொடர்ந்து நாகதம்பிரான் வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

**கும்பாபிஷேகம் வேதாகமாமணி சிவஸ்ரீ. சோ. இரவிச்சந்திர குருக்கள் தலைமையில் நடைபெறும்**
(ஸ்ரீ பத்திரகாளி தேவஸ்தான ஆதீனகர்த்தா, திருகோணமலை)

**ஆலய பிரதம குரு**
சிவஸ்ரீ சிவலோக சர்மா குருக்கள்

**ஆலய நிர்மாணம், சிற்பம், வர்ணம்**
ஸ்தபதி ஜெயபாலன் மக்கள்

மூன்று தினங்களும் அன்னதானமும் இடைபெறும். அடியார்கள் பூசைக்குத் தேவையான பூக்கள், மாலைகள், இளநீர் என்பவற்றை ஆலயத்திற்கு கொண்டுவந்து கொடுத்து நாகதம்பிரானின் அருளைப்பெற்று உய்யலாம்.

இவ்வண்ணம், இறை பணியில்
ஆலய பரிபாலன சபை